R. No. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1. ஈரோடு, பவ-ஹூ வைகாசி-மீ 28 உ (10—6—1934) மலர் 29.

இனாம்! சந்தாதாரர்களுக்கு இனாம்!

அருமையான புத்தகங்கள் இனாம்!

நமது "புரட்சி" பத்திரிகைக்கு ஜூன் மாதம் 1-தேதியிலிருந்து 31-உக்குள் முன்பணம் மணியார்டரில் அனுப்பி புதுசந்தாதாரராய்ச்சேருகிறவர்களுக்கு 8 அணா விலையுள்ள அடியில்கண்ட புஸ்தகங்களில் எது இஷ்டமோ அதை இலவசமாய் புக்போஸ்டில் அனுப்பிக்கொடுக்கப்படும்.

கைவல்யம்		0–8–0
இந்தியாவின் குறைபாடு		0–8–0
இராமாயண ஆராய்ச்சி (அயோத்தியாகாண்டம்)		0–8–0
மாதர் சுதந்திரம் or பெண்மக்கள் பெருமை		0–8–0
லெனினும் மதமும்	அணா 4	0–8–0
பொதுவுடமைத்தத்துவம்	,, 3	
போல்ஷ்விக் முறை	,, 1	
கடவுளும் பிரபஞ்சமும்	அணா 4	0–8–0
சோஷியலிசம்	,, 3	
இலங்கை உபந்யாசம்	பை 6	
சமதர்ம உபந்யாசம்	,, 6	

மானேஜர், "புரட்சி", ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்

ஈ. வெ. ரா. சொற்பொழிவு.
விலை அணா 2,

அகத்தியர் ஆராய்ச்சி
விலை அணா 2.

இராமலிங்க சுவாமிகள் பாடல்
விலை அணா 2.

சுயமரியாதைப் பாடல்
விலை அணா 2.

கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணா 2.

சுயமரியாதை தாலாட்டு
விலை அணா 2.

சோதிடப் புரட்டு
விலை அணா 2.

பர்னார்ட்ஷா உபந்யாசம்
விலை அணா 1.

இலங்கை உபந்யாசம்
விலை அரை அணா.

கத்தோலிக்கர் வீண் கூச்சல்
விலை அரை அணா.

குடி அரசு புத்தகாலயம் ஈரோடு.

நாகர் கோவிலிலிருந்து
தோழர் பி. சுப்பிரமணியம்
பி. ஏ. பி. எல். அவர்களை
ஆசிரியராகக்கொண்டு

"தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோரும் வெளி வருகிறது.

வருட சந்தா	ரூ.	3—0—0
6 மாதம்	,,	2—0—0
3 மாதம்	,,	1—4—0

மானேஜர்,
"தமிழன்" ஆபீஸ்,
கேட்ரோட், நாகர்கோவில்.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழன், வெட்டு ஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அறிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0
வெளிநாடு ரூ. 5—0—0

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
அண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம்	ரூ.	4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

வெளிவந்து விட்டது! நமது புதிய பிரசுரங்கள் !!

சோஷியலிசம்.

உலகானுபவப் பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intellegint womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் படித்துப் பார்க்கவேண்டிய நூல், விலை அணா 3.

சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் 1½ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

போல்ஷ்விக் முறை.

விலை அணா 1. தனிப்பிரதி வேண்டுவோர் 1¼ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்:— மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம, ஈரோடு.

யாகப் புரட்டு

ஆரணியில் தோழர்கள்
ஈ. வெ. இராமசாமியும், திரு. வி. கல்யாணசுந்திர முதலியாரும்.

யாகக் கண்டனக் கூட்டம்.

ஆரணிக்குப் பக்கத்தில் கடலாடி என்னும் கிராமத்தில் சில பார்ப்பனர்களால் யாகம் நடத்தப்படுவதை உத்தேசித்து அதைக் கண்டிப்பதற்காக வென்று சென்னை ஜீவரக்ஷா பிரசார சபையாரால் 3—6—34ல் ஒரு கண்டனக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கூட்டத்திற்குத் தலைமைவகிக்க சென்னை "நவசக்தி" ஆசிரியர் தோழர் திரு. வி. கல்யாணசுந்திர முதலியார் அவர்களும், உபன்யாசம் செய்ய ஈரோடு "குடி அரசு" ஆசிரியர் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தார்கள்.

அதன்படி தோழர்கள் ஈ. வெ. ரா. வும், திரு. வி. க-வும் மற்றும் தோழர்கள் ஜீவரக்ஷா சபை உபன்யாசகர் ஸ்ரீ பால் அவர்களும், கௌரவ மாஜிஸ்டிரேட் சீனிவாசமுதலியார், சுப்பிரமண்ய சாஸ்திரி பி. ஏ. எல். டி. ம. வி. நடராஜ சாஸ்திரி, நித்தியானந்தம், ஆறுமுகம் முதலியவர்களும் ஈரோடு சென்னை முதலிய இடங்களிலிருந்து 3—6—34 தேதி ஆரணி வந்து சேர்ந்தார்கள். அவர்களை ஆரணி பிரபல வியாபாரியும், செல்வவானுமான தோழர் வசுபால நயினார் அவர்கள் வரவேற்று தங்களது சத்திரத்தில் வைத்து வேண்டிய சௌகரியம் செய்து தங்களது விருந்தாளியாக நடத்தினார்கள்.

அன்று மாலை ஆரணிபஜார் வீதியில் ஒரு பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தபடி ஒரு பெரிய கூட்டம் கூடிற்று. அக்கூட்டத்திற்கு சுமார் 2000 பேர்களுக்குமேல்சகலவகுப்பாரும் வந்திருந்தோடு 6 மணி முதல் 8-30 மணி வரை வெகு அமைதியுடனும், பொருமையுடனும் இருந்து உபன்யாசங்களைக்-கேட்டு ஆனந்தித்தடன் அனேகர் மனம் திரும்பினார்கள்.

கூட்டம் ஆரம்பமானதும் தோழர் வசுபால நயினார் அவர்கள் கூட்டம் கூட்டப்பட்டதின் கருத்தை விளக்கி, தாங்கள் ஏன் இப்படிப்பட்ட கூட்டம் கூட்ட நேர்ந்தது என்பதையும் எடுத்துச் சொல்லி யாகத்தைப்பற்றி சாஸ்திர முறைப்படி பல பெரியோர்கள் ஏற்கனவே கண்டித்துள்ள அபிப்பிராயங்களை மேற்கோள் காட்டி, தோழர் திரு. வி. க அவர்களை கூட்டத்திற்கு தலைமை வகிக்கப் பிரேரேபித்தார். தோழர் ஸ்ரீ பால் அவர்கள் அதை ஆமோதித்தார். தோழர் திரு. வி. க. அவர்கள் பெருத்த கரகோஷத்தினிடையே ஆசனத்தமர்ந்து புஷ்பஆரமிடப்பெற்று முகவுரையாக சில வார்த்தைகள் மாத்திரம் சொல்லி பிரதம உபன்யாசகராக அழைக்கப்பட்டிருக்கும் தோழர் ராமசாமி அவர்களைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லி முதலாவதாக சென்னை தோழர் ஆறுமுகம் அவர்களைப் பேசும்படி கேட்டுக்கொண்டார். அவர்கள் பேசியபின்பு தோழர் ஈ. வெ. ரா. அவர்களைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

ஈ. வெ. ரா. உபந்யாசம்.

ஜீவகாருண்யம்.

தலைவரவர்களே! தோழர்களே!:

ஜீவகாருண்யத்தைப்பற்றி நான் பேச வந்திருப்பது உங்களில் பலருக்கு வேடிக்கையாகக் காணப்படலாம். ஏனெனில், நான் நீங்கள் பெரும்பாலும் கருதி இருக்கிற ஜீவகாருண்யத்தைச் சேர்ந்தவனல்ல என்று நீங்கள் கருதி இருப்பதே யாகும். ஜீவகாருண்யம் என்கின்ற வார்த்தைக்கு ஒவ்வொருவர் ஒவ்வொருவிதமான அர்த்தம் கொண்டிருக்கிறார்கள். சிலர் மாம்சம் சாப்பிடாமல் இருந்தால் அதுவே பெரிய ஜீவகாருண்யமென்றும், மற்றப்படி ஜீவர்களுக்கு எவ்வித மனவருத்தத்தையும், உடல் வருத்தத்தையும் செய்தால் குற்றமில்லை என்றும் கருதி இருக்கிறார்கள். சிலர் ஜீவர்களை ஹிம்சைப்படுத்தாமல் இருந்தால் போதும் என்றும் மாம்சம் சாப்பிடுவதைப்பற்றிக் குற்றமில்லை என்றும் கருதி இருக்கிறார்கள்.

சிலர், சில ஜந்துக்களை மாத்திரம் இம்சைப்படுத்தக் கூடாதென்றும், மற்ற ஜந்துக்களைப்பற்றிக் கவலை இல்லை என்றும் கருதி இருக்கிறார்கள். ஜீவகாருண்யத்திற்கு இந்தப்படி எத்தனையோ விதமான கருத்துக்களும் தத்துவங்களும் இருக்கின்றன.

விவரமாய்ச் சொல்லவேண்டுமானால் ஜீவகாருண்யம் என்பது ஒவ்வொரு தேசத்துக்கும் ஒவ்வொருமதத்துக்கும், ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு விதமாய்க் கருதப்படுகின்றது.

இந்துக்கள் என்பவர்கள் பசுவை வணங்குவார்கள். அதனிடத்தில் அளவுக்கு மீறிய மரியாதையும், ஜீவ காருண்யமும் காட்டுவார்கள். யாராவது பசுவைக் கொன்றால்—சாப்பிட்டால் அவர்களிடம் குரோதமும், வெறுப்பும் கொள்ளுவார்கள் இந்தக் காரணத்தினாலேயே இந்துக்களுக்கு மகமதியர்கள் மீது வெறுப்பும் அருசையும் இருந்து வருகின்றன. இதனாலேயேபல இடங்களில் இந்து முஸ்லீம் கலகங்களும் கக்ஷிகளும் உண்டாகின்றன. இந்துக்களிலேயே பறையர், சக்கிலியர் என்று அழைக்கப்படும் வகுப்பார், மாட்டு மாம்சம் உண்பதினாலேயே அவர்களை கீழ் ஜாதிக்காரர்கள் என்று கருதுவதாகவும், அதனாலேயே அவர்களைத் தொடுவதற்கு அஞ்சுவதாகவும் சொல்லப்படுகின்றன. இதை அனுசரித்து பல சாஸ்திரங்களும் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன-

ஆனால் இப்படிப்பட்ட இந்துக்கள் பசுமாடுகள் விஷயத்தில் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்று பார்த்தால் வண்டியிலும் உழவிலும், ஏத்தத்திலும், செக்கிலும் கட்டி அதை சாகும் வரை உபத்திர விக்கிறார்கள். அதை நல்ல காளைப் பருவத்தில் கட்டிப்போட்டு விதர்களை நசுக்கி கொட்டாப்பிடியால் தட்டிக்கரைத்துக்கொடுமைப்படுத்துகிறார்கள். அதன் பாலை அதன் கன்றுக்குக்கொடுக்காமல் அதற்குவெறும் புல்லைப்போட்டு விட்டுத்தாங்கள்சாப்பிடுகிறார்கள். இப்படி அர்த்தமற்ற ஜீவகாருண்யம் பலப்பலஜீவர்கள்பெயரால் எத்தனையோ விதத்தில் உலகத்தில் வழங்குகின்றன. பக்ஷி, மிருகம், ஊர்வன ஆகிய விஷயங்களில் காட்டப்படும் ஜீவகாருண்யத்தில் ஒரு சிறுபாகம் கூட மனித ஜீவனிடத்தில் மக்கள் காட்டுவது அருமை என்றே சொல்லாம்.

மக்கள் சமூக வாழ்க்கைத்திட்டத்தின் பயனாய் ஒருவரை ஒருவர் எவ்வளவு கொடுமைப்படுத்துகிறார்கள்? எவ்வளவு கொடுமைக்கும் துக்கத்துக்கும் ஆளாக்குகிறார்கள்? என்று பார்த்தால் நடைமுறையில் உள்ள ஜீவகாருண்யங்கள் முட்டாள்தனமான தென்றே சொல்லலாம்.

நான் ஏன் வந்தேன்?

நான் ஏன் இங்கு இந்த ஜீவகாருண்யக்கூட்டத்திற்கு வந்தேன்என்று சிலர் கேட்கலாம். உண்மையிலேயே இங்கு கடலாடியில் நடக்கும் யாகத்தில் ஏதோ சிலஜந்தோ-பத்தோ, ஆடுகள் கொல்லப்படுவதை நான் பிரமாதமாகக்கருதி இங்குவரவில்லை. லக்ஷக்கணக்கான ஆடுகள் மாடுகள் மற்றும் சில ஜீவர்கள் தினமும் கொல்லப்படுவது எனக்குத்தெரியும். அப்படிப்பட்டகொலைகளை என்போன்றவர்களால் நிறுத்தி விட முடியாது என்பதும் எனக்குத்தெரியும். அப்படி இருக்க, பின் ஏன்நான் இங்குவந்தேனென்றால் யாகத்தின் புரட்டையும், அது செய்யப்படுவதின் உள் எண்ணத்தையும் அதனால் ஏற்படும் பலன்களையும் "உயர்ந்த ஜாதியார் அஹிம்சா தர்ம முள்ள அந்தணர்" என்று கர்வமுடன் தங்களைச்சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்களின் யோக்கியதையையும் பொது ஜனங்களுக்கு எடுத்துக்காட்டவும் கொல்லப்படும் பிராணிகள் யாகத்தின் பேரால் எப்படிக் கொல்லப்படுகின்றன என்பதையும்ஜனங்களுக்கு அறிவித்து இப்படிப்பட்ட கொடுமையான சித்திரவதை இனி நிகழாமல், இருக்கும்படி செய்ய சாக்காரைத்தூண்டுவதற்காகவுமே இங்கு

வந்திருக்கிறேன்.

இவற்றில் என் அபிப்பிராயம் தவறுதலாய் இருந்தாலும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் நான் உண்மையானதென்று அறிந்ததை எவ்வித விருப்பு வெறுப்பு இல்லாமல் பொது நன்மையை உத்தேசித்து சொல்லுகின்றேன். உங்களுக்கு சரியென்று பட்டதை எடுத்துக் கொண்டு அதற்கும் உங்களாலான உதவி செய்யுங்கள். மற்றதைத் தள்ளிவிடுங்கள்.

கொலைக்கொடுமை.

முதலில் கொலைக்கொடுமைகளைப் பற்றிச் சொல்லுகிறேன். யாகத்தில் கொல்லப்படும் ஆடுகள் எப்படிக் கொல்லப்படுகின்றன என்பது தங்களில் சிலருக்காவது தெரிந்திருக்குமென்றே நினைக்கிறேன். நான் அறிந்தமட்டில் ஆட்டை கால்களைக் கட்டிக் கீழே தள்ளி கொம்பைப்பிடித்து ஒருவர் அமிழ்த்திக்கொண்டு வாய்க்குள் மாவைத் திணித்துக் கொண்டிருக்க ஒருவர் நன்றாக மூச்சு விடாமல் கட்டி சத்தம் போடாமல் செய்து ஒருவர் விதர்களை கிட்டிபோட்டு நசுக்க, மற்றவர் வயிற்றில் ஆயுதங்களால் இடித்து கிழித்து அதன் சிற்சில உறுப்புகளை தனித்தனியாய் அறுத்து எடுப்பதன் மூலம் கொல்லப்படுகிறதாம். இது சகிக்கக்கூடியதா? உயிர்களிடத்தில் அன்புகாட்டக்கூடிய ஜாதியார் செய்யக்கூடியதா? அஹிம்சைக்காரருக்குஏற்றதா? இப்படிப்பட்டவர்கள் மேல் ஜாதிக்காரர்களா? இவர்களுக்கு பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்ள உரிமையுண்டா? மற்றவர்களைப் பார்த்து கீழ் ஜாதியார் என்றும், ஜீவகாருண்யமில்லாதவர்கள் என்றும் சண்டாளர்கள் என்றும் பாபிகள் என்றும், பாதகர்களென்றும், அழைக்க இவர்களுக்கு உரிமையுண்டா? யோசித்துப்பாருங்கள். ஆடு, கோழியை தலைகீழாகப் பிடிப்பதையும் தர, தரவென்று இழுப்பதையும் ஜீவஹிம்சை என்று சட்டஞ்செய்து அம்மனிதர்களை தண்டிக்கும்சர்க்கார் இவர்களை என்ன செய்யவேண்டும்? ஆலையிலிட்டு நசுக்கும்படி சட்டம் செய்தால் அதை தப்பு என்று சொல்ல முடியுமா? யோசித்துப் பாருங்கள். இந்த யாகம்ஆட்டுக்கு மாத்திரமில்லையாம். மாடு, மனிதர், குதிரை முதலியவைகளுக்கும் உண்டாம் இப்படியே விட்டு விட்டால் நாளைக்கு இந்த ஆடுகளின் கதிதானே மனிதர்க்கும் ஏற்படும். மதசம்மந்தத்தில் அரசாங்கம் நுழைவதில்லை என்று சொல்லி அரசாங்கம் சுலபமாய் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் நாளைக்கு நரமேதயாகம் செய்து 10, 20 மனிதர்களை இந்தப்படி சித்திரவதையான கொலை பாதகம் செய்தால் மதத்தில் பிரவேசிக்காமல் அரசாங்கம் பார்த்துக்கொண்டு இருக்குமா? அதுபோலவே இப்போது கருதி இப்படிப்பட்ட மூர்க்கத்தனமான சித்திரவதைக் கொலைகளையும், ஹிம்சைகளையும் அரசாங்கம் ஏன் நிறுத்தக் கூடாது பார்ப்பனர்களுக்குப்பயந்தோ, மதத்திற்கு பயந்தோ தாங்கள் சும்மா இருப்பதாகச் சொல்வார்களானால் இப்படிப்பட்ட கொலையும் சித்திரவதையும் தங்கள் மதத்திற்கு விரோதம் என்று கருதி அதற்காக வேதனைப்படும் ஜயின மதத்தினுடையவும் ஜயினர்களுடையவும், கொள்கையும் மரியாதையும், உணர்ச்சியும் காப்பாற்றப்படவேண்டாமா என்று கேள்க்கின்றேன்.

இராமாயணம்.

தோழர்களே! இந்தக் கொடுமைகளை உருவகப்படுத்திப் பார்க்கும் போது இராமாயணக்கதையின் தத்துவம்இதில்தாண்டவமாடுகிறன்றது. இராவணனையும் அவர் குடும்பத்தையும் ஆரியர்கள் இழித்துப் பழித்துக் கூறி அவன் அரசை நாசமாக்கியதாகக் காணப்படுங் கதையை இப்போதுநினைத்துப்பாருங்கள். இராமாயணக் கதைக்கு அஸ்திவாரமே இந்த சித்திரவதைக் கொலைபாதகச்செயல்களான யாகமே யாகும். தாடகை என்கின்ற ஒரு பெண் யாகத்தைக் கெடுத்ததற்காகத் தானே கொல்லப்பட்டிருக்கிறார். இந்த மாதிரி கொலை பாதகயாகத்தை கெடுக்கப் யார் தான் துணியமாட்டார்கள். யாகத்தைக் கண்டு மனம் வருந்தி பரிதாபப்பட்டு அதை நிறுத்த முயர்ச்சித்ததல்லாமல் அந்த அம்மாள் செய்த கெடுதி என்ன?

நமக்குக் சக்தியில்லாததாலும் நம் உணர்ச்சிக்கு அனுகூலமான ஆக்ஷி இல்லாததாலும் நாம் எல்லோரும் இங்கு வந்து கத்துகிறோம். சக்தியும் ஆக்ஷி உரிமையும் இருக்குமானால் நாம் தாடகையைப்போல் தானே நடந்துகொண்டு தீருவோம். யாகத்தை வெறுத்ததற்காக அந்த அம்மாளை கொன்றுவிட்டதுமல்லாமல் அந்தம்மாளை இழித்துக் கூறும் முறையில் அந்த அம்மாள் மூத்திரம் பெய்து யாக நெருப்பை அணைத்து விட்டார் என்றும் மிருகங்களையும் பக்ஷிகளையும்பச்சையாட்சாப்பிட்டார் என்றும் பொருத்த மற்றதும், போக்கிரித்தனமானதுமான ஆபாசக்கதைகளையும் கட்டி விட்டார்கள் இதிலிருந்தே ராமாயணக் கதை ஜீவகாருண்யம்காரணமாய் ஏற்பட்டஆரியர் திராவிடர் கலகம் என்றும் ஆரியர் தங்களை உயர்த்தியும் திராவிடர்களைத் தாழ்த்தியும்திராவிடர்களுக்கு என்றும் பழி இருப்பதற்காக எழுதி வைத்துக்கொள்ளப்பட்டது என்றும் ராம லக்ஷ்மணர்கள் ஆரியக் கூட்டத்தைச்சேர்ந்தவர்கள் என்றும் ராவணனுதியோர் திராவிட-அதாவது ஜீவகாருண்யக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் விளங்கவில்லையா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

அக்கதையில் மிருகங்களையும் ஜீவர்களையும் கொல்லும் விஷயங்களிலும் மது மாம்சம் சாப்பிடும் விஷயங்களிலும் சூதுவாது செய்த விஷயங்களிலும் பெண்களை இழிவாய் நடத்திக் கொடுமைப்படுத்தின விஷயங்களிலும் சிறிதும் தயங்காத ராம லக்ஷ்மணக் கூட்டங்களை இவ்வளவு தூரம் புகழ்த்திருப்பதுமல்லாமல் அவர்களைக் கடவுளாகக் கருதச் செய்து திராவிட மக்களைக்கொண்டே பூஜிக்கவும் வணங்கவும் புகழவும் செய்து விட்டார்கள். அதுபோலவே ராவணாதியர்கள் இந்த யாகத்தை வெறுத்ததல்லால் வேறொரு கெடுதியும் ராம லக்ஷ்மணர் செய்த அளவு கூட செய்யாதவர்களை திராவிட மக்களைக்கொண்டே இகழச்செய்து விட்டார்கள். திராவிட மக்களில் சிலரையே இவ்வித புகழ்ச்சியும் இகழ்ச்சியும் செய்து கொண்டு பிழைக்கவும் செய்து விட்டார்கள். ஒரு வயிற்றில் பிறந்த இருவரில் ஒருவன் (ராவணன்) ராக்ஷதனும்; ஒருவன் (விபூஷணன்) தேவகணத்தைச் சேர்ந்த (ஆழ்)வனும். என்ன புரட்டு! யோசித்துப் பாருங்கள். ஒரு பெண்ணின் மூக்கையும் முலையையும் அறுத்த பாவிகள் கடவுளின் அவதாரங்களாம். ஆயிரக்கணக்கான ஆடு குதிரை மாடு முதலியவைகளை மேற்கண்டபடி சித்திரவதை செய்து கொன்று தின்றவர்கள் தேவர்களாம். இதிலிருந்து கடவுள்கள் தேவர்கள் பிராமணர்கள் ஆகியவர்களின் யோக்கியதைகளை சற்று நினைத்துப் பாருங்கள். திராவிட மக்களின் யோக்கியதைகளையும் ஏமாளித்தனத்தையும் எண்ணிப்பாருங்கள்.

புண்ணியம், சோர்க்கம்.

இது நிற்க, இந்த யாகங்கள் புண்ணிய காரியங்களாம். சுவர்க்கத்திற்குக் காரணமானவைகளாம், புண்ணியம், சொர்க்கம் என்கின்ற புரட்டைப் பாருங்கள். ஜீவர்களை சித்திரவதை செய்தல் புண்ணியமாகவும் சொர்க்க லபிதமாகவும் இருந்தால் இனி பாபத்துக்கும் நரகத்துக்கும் காரணமான காரியம் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை. நமக்குப்புண்ணியம் சொர்க்கம்வேண்டுமானால் நமக்கு இஷ்டமானவர்களைப்பிடித்து கால் கைகளைக்கட்டிப்போட்டு வாயில் மண்ணை அடைத்து விதரைப் பிடித்து நசுக்கிக் கொன்று போட்டால் புண்ணியமும் சொர்க்கமும் கிடைத்துவிடும் போல் இருக்கிறது. வேண்டுமானால் சில மந்திரங்களையும் சொல்லி விடலாம். இதில் நமக்கு இரண்டுவித லாபம் போலும் சொர்க்கம் நரகம் என்பவைகள் சோம்பேறிகளின் வயிற்றுப் பிழைப்பு சாதனங்கள் என்று பல தடவை நான் சொல்லிவந்திருக்கிறேன். பாடுபட்டு உழைத்தவன்பொருளைக் கையைத்திருகிப் பிடுங்கிக் கொள்வதற்குப் பதிலாக சொர்க்க நரகங்கள் என்னும் பூச்சாண்டிகளைக் காட்டி பயப்படுத்திப் பிடுங்கிக் கொள்ளப்படுகின்றன. இப்படிப்பட்ட சொர்க்க நரகத்துக்கு உண்மையான அர்த்தம் நல்ல விதத்தில் செய்ய வேண்டுமானால் மனிதனின் மூர்க்க சுபாவமும் பழிவாங்குந் தன்மையும் சொர்க்க நரகம் என்னும் வார்த்தைகளால் கற்பனைகளால் பிரதி பலிக்கின்றது என்பதேயாகும்.

யாகத்தின் கருத்து.

இப்படிப்பட்ட சொர்க்க நரகத்தைப் பிரசாரம் செய்யவே யாகங்கள் முதலியன செய்யப்படுகின்றன. யாகத்தில் பிராமணர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதே எனது அபிப்பிராயம். மற்றவர்களை மிரட்டவும் ஏமாற்றவும் சிலர்செல்வம் சேர்த்து வயிறு பிளக்கவுமே இப்போது யாகங்கள் செய்யப்படுகின்றன.

யாக சம்பந்தமான வேத சாஸ்திர ஆதாரங்கள்நமக்குப் பொருத்தமானவைகளாகுமா? நாம் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியுமா? இப்படிப்பட்ட கொடுமைக்கும் கொலை பாதகத்துக்கும், சித்திரவதைக்கும் ஒரு கடவுள் சொர்க்கத்தைக் கொடுப்பதாய் இருந்தால் கடவுளின் தன்மையாகக்கூறப்படும்அன்பு, கருணைஎன்றுசொல்வது உண்மையாய் இருக்க முடியுமா? கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டஒரு ஜீவனை மற்றொரு ஜீவன் சித்திரவதை செய்து ஆகுதி கொடுப்பதைக் கடவுள் விரும்புகின்றார் என்றால் ஜீவர்களை எல்லாம் கடவுள் உற்பத்தி செய்தார் என்பது உண்மையாயிருக்க முடியுமா? கடவுள் பேராலேயே இப்பேர்ப்பட்ட காரியங்கள் நடப்பதை ஒரு ஒரு கடவுளோ, அரைக் கடவுளோ அணுவளவு கடவுளோ இருந்தால் பார்த்துக்கொண்டு இருக்க முடியுமா? அல்லது கடவுளுக்கு இது தெரியாது என்று சொல்லி விட முடியுமா? இவைகளெல்லாம் பாமர மக்களை ஏமாற்றுவதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சிப்பிரசாரமேயொழிய வேறில்லை. இப்படிப்பட்ட யாகங்களுக்கு சங்கராச்சாரி சுவாமியார் என்பவரும் அனுமதியளிக்கிறாராம். பணம் கொடுக்கிறாராம். இதிலிருந்து சங்கராச்சாரிகள் என்பவர்கள் யோக்கியதைகளையும் உணர்ந்து கொள்ளுங்கள்.

யாகம் ஏன் செய்யப்படுகிறது?

இந்த யாகங்கள் இப்பொழுது ஏன் செய்யப்படுகின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? சனாதன தர்மங்கள் கெட்டுப் போய் விட்டனவாம். எதனால் என்று கேட்பீர்களானால் சாரதா சட்டம் செய்யப்பட்டு விட்டதாம். தீண்டாமை ஒழிப்புச் சட்டமும், கோவில் பிரவேசச்சட்டமும் இப்போது இந்திய சட்டசபையில் இருக்கிறதாம். அவை நிறைவேறிவிடும் பக்ஷத்தில் சனாதன தர்மத்துக்குப் பெரிய ஆபத்து வந்து விடுமாம். ஆதலால் யாகங்கள்செய்வதின் மூலம்அவைகளைத்தடுத்து சனாதன தர்மத்தை நிலை நாட்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

பிரிட்டனில் நிர்வாண இயக்கம்.

50,000 அங்கத்தினர்.

ஆண்களும், பெண்களும் ஆடைகளின்றி இருக்கும் அதிசயம்.

இயற்கை வாழ்வே இன்ப வாழ்வு.

("ரேஜிஞல்டு கிராண்ட்" எழுதியது)

பிரிட்டனில் இப்போது நிர்வாண இயக்கம் மிகத் தீவிரமாகப் பரவிவருகிறது. தேசத்தின் பல்வேறு பாகங்களிலும் ஆயிரக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் அநேக சங்கங்கள் ஆரம்பித்து, இவ்வருடம் ஓர் பெரிய நிர்வாண இயக்கம் நடத்த ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள். பன்னிரண்டு சூரிய ஸ்நானத்துறைகளில்; ஆடவர்களும் பெண்டிரும் நிர்வாணமாகவே இருந்துவருகின்றனர். கார்டிவ், கிளாஸ்கோ என்னும் இரண்டு இடங்களிலும் நிர்வாண முறை முற்றிலும் கையாளப்பட்டு வருகிறது. வசந்த காலத்திலும் வேனிற் காலத்திலும், ஒவ்வொரு வாரமுடிவிலும் ஆண்களும் பெண்களும், குழந்தைகளும் இரகசியமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிர்வாணிகளின் முகாமிற்குச் செல்கிறார்கள். அம்முகாமிற்குச் சென்று அவர்கள் தங்கள் ஆடைகளையெல்லாம் களைந்தெறிந்துவிட்டு, தேகாப்பியாச விளையாட்டுச் செய்கிறார்கள். தண்ணீரில் நீந்தி விளையாடுகிறார்கள்; சூரிய நமஸ்காரம் செய்கிறார்கள்; மற்றும உல்லாசமாகப் பொழுது போக்குகிறார்கள்.

கடந்த சில வாரங்களாக நான் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும் இந்த நிர்வாணிகளின் முகாம்களுக்குச் சென்று விசாரணை செய்தேன். நாளுக்குநாள் நிர்வாணிகளின் தொகை அங்கு அதிகரித்துக்கொண்டே வருகிறது. சில பெரிய முகாம்களுக்கு சென்று அங்குள்ள விஷயங்களையும் அறிந்தேன். இவ்வருடத்திற்கு தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் இடத்தையும் நான் பார்த்தேன்.

50,000 பவுன் செலவு,

சூரிய ஸ்நானத்திற்கெனச் செல்லும் நபர்கள் எல்லோரும் நிர்வாண முறையையே கைக்கொள்ளுகிறார்கள். தேசத்தின் பல்வேறு பாகங்களிலும் சூரிய ஸ்நானத்துறைகள் ஏற்படுத்துவதற்காக கடந்த 12 மாதங்களாக 50,000 பவுன் செலவிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. தற்சமயம் 100 இடங்கள் வரை தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கு சூரிய ஸ்நானம் செய்வதற்கு; அல்லது நிர்வாண இயக்கத்தைத் தழுவுவதற்கு வேண்டும் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. கூடியசீக்கிரம் அதிகப்படியான நிர்வாணிகள் முகாம்கள் ஏற்படுத்தப்படுமெனவும் சொல்லப்படுகிறது. இக்கோடைகால முடிவிற்குள், ஏராளமான சூரிய ஸ்நானத் துறைகள் ஏற்படுத்தப்படுவதை நாம் அறியலாம். கிராய்டன், ரெட்ஹில், வால்டன், ஆன்தேம்ஸ், கியூ, ஷெப்பீல்டு, லீட்ஸ், பிராட்போல்டு, இல்கிலீ, ஹேரோகேட், கிளாஸ்கோ, எடின்பர்க், சிட்கப், லூடன், ரீடிங், வின்சர், மாக்கிள்ஸ் பீல்டு, பிரிஸ்டல், சவுதாம்டன், வாட்போர்டு, எக்ஸீடர், சவுத்யென்ட், லிவர்பூல், மான்செஸ்டர், பிளாக்பூல், ஓல்ட்ஹேம், நார்விச், ஆக்ஸ்போர்டு, மைன்ஹெட் டோர்செட், கேம்பிரிட்ஜ், வொர்க்கிங்டன் முதலான இடங்களில் ஏற்கனவே நிர்வாணிகள் முகாம்கள் இருக்கின்றன. இவைகளில் அநேகத்திற்கு 'சூரிய ஸ்நானச் சங்கம்' எனப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறன.

வாரமொன்றுக்கு 3 பவுன்.

சில தினங்களுக்கு முன் சூரிய ஸ்நான முகாம்களைப்பற்றிய விளம்பரமொன்றை நான் பார்வையிட்டேன். அதில் தெற்குக் கடற்கரையோரத்திலுள்ள ஓரிடத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சூரிய ஸ்நானத் துறைக்கு வாரமொன்றுக்கு 3 பவுன் வாடகை கொடுக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அவரவர்களிஷ்டம்போல், நிர்வாணமாக வேண்டுமானல் சூரிய ஸ்நானம் செய்துகொள்ளலாமெனவும் அதில் கூறப்பட்டிருந்தது. தேசத்தின் பல்வேறு பாகங்களிலும் இந்த சூரிய ஸ்நானம் செய்ய விரும்புவர்களுக்காக சாப்பாடு விடுதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. வருகிற வேனிற் காலத்தில் சூரிய ஸ்நானம் செய்வதற்கு இப்பொழுதே, அநேகர் தங்களுக்கெனத் தனியிடம் ஒதுக்கிவைக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். பிரிட்டனில் தற்சமயம், சூரிய ஸ்நானம் பழகிவருகிறவர்கள் 50,000 பேர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் அநேகமாக நிர்வாண இயக்கத்தைச் சேர்ந்தவர்களே. வருடந்தோறும் இவ்விஷயத்தில் அதிகமாக அங்கத்தினர்கள்சேர்ந்துகொண்டேஇருக்கிறார்கள்

நிர்வாணமான டென்னிஸ் விளையாட்டு.

கடந்த வருடத்தில் ஹேல்ஸ்பீர் என்னுமிடத்தில் சூரிய ஸ்நானம் செய்பவர்களின் மகாநாடொன்று நடைபெற்றது. அவ்வமயம் சுமார் 230 அங்கத்தினர்கள் விஜயம் செய்திருந்தனர். டென்னிஸ் போட்டிப் பந்து விளையாட்டு, நீந்தல்போட்டி, நீரில் மூழ்கும் போட்டி முதலியவைகள் எல்லாம் நிர்வாணக்கோலத்துடனேயே நடைபெற்றன. இந்த சூரிய ஸ்னும் செய்பவர்களின் மகாநாடு இவ்வருடமும் நடைபெறுமென்று தெரிகிறது. கடந்த வருடத்தைக் காட்டிலும் இவ்வருடமும் கூட்டம் அதிகமாக விருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. லண்டனிலிருந்து சிறிது தூரத்திலுள்ள ஓர் நிர்வாணிகள் முகாமிற்கு நான் சுமார் 1 மாதகாலத்திற்கு முன்போயிருந்தேன். என்னை ஆடையுடன் உள்ளே அனுமதிக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரிலேயே நான் அங்கு சென்றேன். பிரஸ்தாப முகாம், மரங்கள் நிறைந்த ஓர் பள்ளத்தாக்கில் அமைந்திருக்கிறது. அதனைச் சுற்றி வேலிபோடப்பட்டிருக்கிறது. இந்த முகாமில் பெரிய உத்தியோகஸ்தர்களும் பாரிஸ்டர்களும் பணக்காரர்களும் மற்றும் சாதாரண ஜனங்களுமிருக்கிறார்கள்.

நிர்வாணிகள் வாழ்க்கை.

நான் அங்கு சென்றவுடன் சுமார் 20 அல்லது 30 வயதுவந்த நபர்கள், தவளைக் குதிப்பாட்டம் ஆடுவதைப் பார்த்தேன். அவர்கள் பிறந்த கோலத்துடனேயே காணப்பட்டனர். சிலர் வெறுங்காலுடன் பந்துவிளையாடிக்கொண்டிருந்தனர். அங்கு நான் ஒரு நடிகியையும், பிரபல பாரிஸ்டரையும் ஓர் நாவல் ஆசிரியரையும் பார்த்தேன். மேலும் அங்கு இரண்டு பள்ளி ஆசிரியர்களும் ஒரு இன்ஜினியரும் நான்கு குமாஸ்தாக்களும் காணப்பட்டனர். நான் அநேக சங்கங்களுக்கு விஜயம் செய்து மிக விநோதமான விஷயங்களை அறிந்தேன். ஒரு முகாமில் 12 மாதகாலம் வாழ்ந்துவந்த ஒரு கோஷ்டியை நான்பார்வையிட்டேன். அவர்களில் ஐந்து தம்பதிகள் மணம்செய்ய ஒப்பந்தம் செய்திருக்கின்றனர். 3-தம்பதிகள் மணம் செய்துகொண்டிருக்கின்றனர். இயற்கைப் பிரகாரம் காலங்கழிக்க வேண்டுமென்பதே இந் நிர்வாண இயக்கத்தின் முக்கிய நோக்கமாகும். நிர்வாணச் சங்கங்கள் மிக மனோ உறுதியுடன் நடத்தப்படுகின்றன. சூரியஸ்நான சங்கத்தில் சேருபவர்கள், தாங்கள் சேருவதற்கு முன் ஓர் உறுதிமொழிப்பத்திரம் எழுதிக் கொடுக்கவேண்டும். அதில் அவர்கள் தாங்கள் மிகப் பரந்த நோக்கமுடையவர்கள் எனக் குறிப்பிடுகிறார்கள்.

ஆடவர்களே அதிகம்.

இச்சங்கத்தில் ஆடவர்களே அதிகமாக அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். 100 ஆட்வர்கள் இருக்கும் சங்கத்தில் சுமார் 10 பெண்களே இருக்கிறார்கள். சூரியஸ்நானச் சங்கங்கள் நகரங்களில் அபரிமிதமாகப் பெருகிவருகின்றன. இரண்டு மூன்று வருடங்களுக்கு முன் 1 பவுன் கூட பெறாத நிலங்களுக்கு இப்போது பெருந்தொகை கொடுக்கப்படுகின்றன. பர்மிங்காமிற்கு வெளியேயுள்ள ஒரு சிறுநிலம் பவுன் 7500க்கு சமீபத்தில் ஓர் சூரியஸ்நான சங்கத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. நிர்வாண சங்கத்தாரும் சூரியஸ்நான சங்கத்தாரும் போலிசாரால் வழக்குத் தொடரப்படுவதைப்பற்றிப் பயப்படுவதேயில்லை. சூரியஸ்நானத் துறைக்கு ஓர் இடம் தெரிந்தெடுக்கப்படுவதற்கு முன்னால் பிரபல வழக்கறிஞர் ஒருவர் அந்த இடத்தைச் சுற்றிப் பார்வையிடுகிறார். அவர் நற்சாக்ஷிப் பத்திரம் அளித்தபின்னரே அந்த இடம் சூரியஸ்நான சங்கத்தாரால் உபயோகிக்கப்படும் ரஸ்தாவிலிருந்தோ, அல்லது உயர்ந்த மாடிகளின் ஜன்னல் மூலமாகவோ அந்த இடம் தென்படுமானல், வழக்கறிஞர் அதை ஒப்புக்கொள்ளாமல் ரத்துச்செய்து விடுகிறார். இந்த இடத்தை உபயோகிப்பவர்கள். தண்டனைக்குள்ளாவார்கள் சொந்த வீடுகளிலுள்ள முற்றத்தை உபயோகிப்பவர்களும், தங்கள் முற்றங்களை பொதுஜனங்கள் பார்க்க முடியாதவாறு அடைத்துவைத்திருக்கவேண்டும். யாராவது, இந்த சூரியஸ்நான சங்கத்தவர்களையாவது நிர்வாண சங்கத்தையாவது பொது இடத்திலிருந்து பார்த்து விட்டதாகப் புகார் செய்தால் உடனே அவர்கள் மீது வழக்குத் தொடரப்படும்.

(வீ—ரி)

அம்மயநாயக்கனூர் ஸ்டேசன் மாஸ்டர் வீட்டில் திருமணம்.

பார்பபனப்புரோகிதரை அறவே ஒழித்து 27-3-34-ல் கொடைக்கானல் ரோடு தென் இந்தியா ரெயில்வே கம்பெனி லிமிடெட் ஸ்டேசன் மாஸ்டரும் சுயமரியாதை இயக்க நிலவருள்ஒருவருமானதோழர்பி. கே. ராம்அவர்கள் குமார்த்தி திருச்செல்வி கௌசல்யா தேவிக்கும், (சவுத் மலபார்) சாவகாட் போஸ்டுமாஸ்டர் தர்மதேவ அவர்களின் சகோதரர் திருவாளர் செல்வன், அய்யப்பன் அவர்களுக்கும் நடைபெற்ற திருமணம் பார்ப்பனப் புரோகிதரை அறவே ஒழித்து மலையாளம் சகத்குரு சாமிகள் முன்னிலையில் மணமகளும், மணமகனும் ஒரு மனப்பட்டு மாலை மாற்றிக் கொண்டார்கள்,

பகுத்தறிவு நிலையம் திறப்புவிழா.

அருப்புக்கோட்டை.

27-5-34ல் தோழர் க. அ. புன்னைமுத்து திறந்து வைக்கையில் நிகழ்த்திய உரையின் சுருக்கம்.

தோழர்களே! பகுத்தறிவு நிலைய ஸ்தாபகர்களே!!

இன்று இந்த பகுத்தறிவு நிலையத்தைத் திறந்து வைக்க நான் என் ஒப்புக்கொண்டேன். உங்களை சமதர்ம லட்சியமுடைய பகுத்தறிவு வாதிகள் என்று நான்தெரிந்து கொண்டது ஒன்று (சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையை) மக்கள் விருத்தி செய்வே இந்த நிலயம் நடைபெறும் என்ற நம்பிக்கை இரண்டு ஆகஇந்தஇரண்டு காரணங்களேயாகும்.

ஸ்தாபகம்.

பொறுப்பாளிகளே!

சரியானபடி பகுத்தறிவு விருத்தியடைந்திராமையே தற்போது மக்களிடம் காணும் குறைபாடுகளுக்கும், முரண்பாடுகளுக்கும் காரணமெனத் தெரிந்தும்; "மதங்கள், சாதிகள், மூடச் சடங்குகள், பொருளாதார வேற்றுமைகளாமிவை யொழிந்த" சமதர்ம லட்சியமே சரியான வழி என்றறிந்தும், நீங்கள் இந்த பகுத்தறிவு நிலயத்தை நிர்மானிக்கிறீர்கள் என்று உணர்கிறேன்.

கடமை

அன்பர்களே!

கடமையை உணர்ந்தவர்கள தங்களுக்கு நேரும் கஷ்ட நஷ்ட சிரமங்களைதற்கும் வருந்துவதில்லை. எதிர்ப்புக்களைப் பொருட்படுத்துவதுமில்லை.

காலமும், இடமும்.

நேயர்களே!

உரிமையை இழந்துள்ள உழைப்பாளிகளுடைய் வாழ்க்கை நிலை சீர்பட வேண்டுமென்று உலகம் கவனம் செலுத்தக்கூடிய இந்நாளில், உயிரற்ற காங்கிரஸ் தோலில் சுயராஜ்யக் கட்சியென்ற வைக்கோலை அமுக்கி, தேசியக் கன்றுருவாகக் கட்டி இந்தியப் பசுவின் முன்வைத்து பதவியேற்றல் என்னும் பால் கறக்க விரும்பும் இந்த நேரத்தில் பழமையின் காரணமான கொள்கைகளாயினும், ஸ்தாபனங்களாயினும் அவை பொதுமக்கள் முன்னேற்றத்திற்குசாத்தியமற்றதாகவோ, அல்லது முன்னேற்றத்தை தடைசெய்வதாகவோ, ஆராய்ச்சி அனுபவங்களுக்கு ஒத்துவராதவைகளாகவோ விருப்பின் அவைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும் அல்லது ஒழிக்கப்படவேண்டும் என்று இடையறு பிரசாரம் செய்யப்படுவதிலிருந்து மக்களிடம் அவ்வுணர்ச்சி பரவி வருமிக்காலத்தில் ஆட்சி முறைகளை மாற்றி அமைக்க அரசியல் நிபுணர்கள் ஆராய்ச்சிசெய்துவழிவகைகளை கண்டுகொண்டிருக்குமிச்சந்தர்ப்பத்தில், கவிகள் நாவலர் என்பார்களால் ஒன்று பத்தாகமிகப்படுத்தியும், கற்பனை செய்தும் புகழப்பட்டதாக விருக்கிறபோதிலும், வாஸ்தவமாகவே மக்களின் பயன்படு ஸ்தாபனங்களாகிய கல்விச் சாலைகள், வாசகசாலைகள், வைத்திய சாலைகள்தொழிர்சாலைகள்முதலியவைகளையுடையதும், வகுப்பு. பால் தொழில், பொருள் முதலிய பழக்க வழக்கங்களால் பல்வேறு ஸ்திதியிலுள்ள 35000 ஜனங்களுடையதுமான அருப்புக்கோட்டையில் பொதுஜன விஷயத்தில் ஐக்கியத்தையும், சம உரிமையையும் காண ஆசைப்பட்டு, ஏக தேசமாக ஆங்காங்கு காணப்படும் சிறிய தொகையினராகிய பகுத்தறிவாளர்கள் முயற்சியால் இந்த வாசகசாலையாகிய பகுத்தறிவு நிலயம் ஸ்தாபகமாகிறது.

புஸ்தகங்களும், பத்திரிகைகளும்

சகோதரர்களே!

சிருஷ்டிகள், சிருஷ்டி கர்த்தாக்கள் அவதாரங்கள், பக்திகள், வரங்கள், சிரஞ்சீவிகள், முத்திகள், சபித்தல்கள் இயற்கை மீறிப் பிறத்தல்கள், ஸ்தல தீர்த்தங்கள், ஆரூட மாந்திரீகங்கள். வருணங்கள், வகுப்பு பேதங்கள் முதலிய பொய்களால்உலகைஏமாற்றுவதற்கும், அடிமைப்படுத்தி அதிகாரம் செலுத்துவதற்கும், வஞ்சகர்களாலும் மோசக்காரர்களாலும், அவர்களை நம்பிப் பின்பற்றியவர்களாலும் எழுதப்பட்ட வேத புராணங்கள், சாஸ்திர இதிகாசங்களிவைகளை யொட்டிய குட்டிக்கதைகள் ஆகிய புஸ்தகங்களையும், மூட நம்பிக்கையை ஆதாரமாகக்கொண்டு வேற்றுமைக்கு மூலாதாரமான குருட்டுப் பக்தியையுடைய வைதீகத்தை நிலைநாட்டவும், மனிதனைத் தெய்வாவதாரமென்றும், மகாத்மா என்றும் அர்த்தமற்றவகையில் பிரஸ்தாபித்து பொது மக்களை வஞ்சித்து குறுகிய நோக்கமுடைய (முதலாளித்வமுடைய) தேசியக் கொள்கையை வலுபடுத்தவும், ஈாருத்தம் இருவைக்கருத்து முன்னுக்குப் பின் முரண், பசப்புதலான போலிப் பதங்கள் விளக்கெண்ணை அபிப்பிராயங்கள் முதலிய சத்தற்ற செய்திகளைப் பிரசுரிக்கும் பத்திரிகைகளையும் வைத்து வம்பளந்து காலத்தை வீணாக்காமல் உண்மையாகவே உலக மக்களின் வாழ்க்கையை சீர்தூக்கும் இயல்புடைத்தான கல்வி, அறிவு, ஒழுக்கம், வியசாயம், கைத்தொழில் விஞ்ஞானம் முதலிய புஷ்டியுள்ள விஷயம் நிறைந்த புஸ்தகங்களையும், மக்களை இடர்படுத்தியுள்ள துன்பக் கொள்கைகளின் வேரை அறுப்பதற்கு பகுத்தறிவோடும், உறுதியோடுமுள்ள கூர்மையான கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் பிரசுரிக்கும் பத்திரிகைகளையுமே இந்த நிலயத்தில் வைக்கப்பட்டிருக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

வளர்ச்சி

அறிவாளிகளே!

முப்பத்தையாயிரம் ஜனங்களுடைய இந்நகரின் அணிகலமான இந்த நிலயம் வளர்ச்சியடைய வகுட்பு, தொழில் பால் என்ற வேற்றுமைகள்—வித்தியாசங்கள்—ஒரு சிறிதுமின்றி ஒரு ஆயிரம் அங்கத்தினர்களைச் சேர்த்து நகர ஜனங்களுடைய முழு ஆதரவையும் பெற்று தெருக்கள்தோறும் இதன் கிளை வாசகசாலைகளை அமைத்து நடத்தப்படல் வேண்டும். இது முடியக்கூடிய காரியமா? வேலை செய்ய முன் வந்துவிட்டால் இன்றிலிருந்து ஒரே ஒரு வருஷத்தில் ஆயிரமல்ல, ஐயாயிரம் அங்கத்தினர்களைச் சேர்க்கவும், பல கிளை வாசகசாலைகளை நிர்மானித்து பரிபாலிக்கவும் முடியுமென்று திட்டமாய்ச் சொல்லுகிறேன்.

பரிசீலனை.

மனிதாபிமானிகளே!

ஆண்களும், பெண்களும், தொழிலாளி முதலாளிகளும், ஏழை பணக்காரர்களும், வகுப்பு பேதங்களில்லாமல் சரி சம உரிமையுடனிருந்து பகுத்தறிவை யடையத்தக்க நிலைமையில் இதன் நடவடிக்கை இருந்திருக்கிறதா? சகலரும் இதன் அங்கத்தினர்களாகி ஆதரித்தும்நிர்வாகஸ்தர்களாகி திறம்பட நடத்தியுமிருக்கிறார்களா? என்பவை போன்ற பலவிதமான பரிசீலனைகளைச் செய்யும் ஆநந்த பரிசீலனைகளிலெல்லாம் இந்த வாசகசாலை சரியான நற்சாட்சி பெற வேண்டு மென்பதே எனது கோரிக்கை.

தலைவர்.

சமதர்மிகளே!

பல காலம் சென்னை சட்டசபை மெம்பராயிருந்து பல நன்மைகள் செய்தவரும், செய்துவருபவரும், இராமநாதபுரம் ஜில்லாபோர்டின் பிரஸிடெண்டாயிருந்து ராஜாங்கத்தார் மெச்சும்படிக்கும் ஜில்லா ஜனங்கள் நன்றி கூறும்படிக்கும் எம்மனோர் என்றும் நினைப்பில் வைத்துக்கொண்டிருக்கும் படிக்கும் திறமையுடன் நடத்தியவரும், பல தாலூகா, ஜில்லா, மாகாணமகாநாடுகளின் தலைவராயிருந்தும் சங்கங்களின் தலைவராயிருந்தும், ஜன சமூகத்திற்கு நன்மை புரிந்தவரும், பரந்த நோக்கமும், சிறந்தகுணமும், தாராள சிந்தையும் ஒருங்கே யமையப்பெற்றவரும், பகுத்தறிவு இயக்கமாம் சுயமரியாதை இயக்கத் தலைவர்களிலொருவருமாகிய தோழர் ஊ. பு அ. சௌந்திரபாண்டியன் எம். எல். ஸி. அவர்கள் இங்கு இந்த ஆரம்பம் விழாவிற்குத் தலைமை பூண்டிருப்பது மிகவும் சிலாக்கியமாகும். அவர்கள் சொல்லும் பல அனுபவ சாத்தியமான முறைகளையும், வழி வகைகளையும் நீங்கள் கவனமாய்க்கேட்டு அதன்படி நடக்க முற்பட வேண்டும். என்று பேசி பகுத்தறிவு நிலயத்தை மகிழ்ச்சியுடன் திறந்துவைத்தார்.

பீளமேட்டில் தொழிலாளர் கூட்டம்.

தோழர் ப. ஜீவானந்தம் சொற்பொழிவு.

28-5-34-ந் தேதி திங்கட்கிழமை மாலை6-30மணிக்குப் பீளமேடு புதூர் மாரியம்மன் கோவிலுக் கெதிரில் கோயமுத்தூர் தொழிலாளர் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம். ஆர். ராம்தாஸ், மஞ்சுளாபாய் அம்மையார் ஆகியவர்கள் சமதர்மக் கீதங்கள் பாடிய பின் தோழர் ஆர். சுந்தரராஜன், தோழர் ஜீவானந்தம் அவர்களைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

பின்னர்தோழர். ஜீவானந்தம் அவர்கள் உலக மெங்கும் உள்ள தொழிலாளிகள் குறைகளையும்,கஷ்டங்களையும் கூறி அதற்குப் பரிகாரம் சமதர்மம் ஒன்றே என்றும், தொழிலாளிகள் அந்த லக்ஷ்யத்திற்காக ஜாதி மதபேதங்களை மறந்து, ஒன்று பட்டு உழைக்க வேண்டு மென்றும், அவ்வொற்றுமைக்காக எல்லோரும் தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்து சங்கத்தை வலுப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அத்துடன் தொழிலாளிகள், தங்கள் வீட்டில் தாங்களும், தங்கள் மனைவிமக்களும், உண்ண வுணவுக்கும், உடுக்க உடைக்கும் இருக்க இடவசதிக்கும்,வழியின்றித்தவிக்கும் பொழுது கடவுளின்பேராலும், மதத்தின்பேராலும் சடங்கின்பேராலும் பணத்தைவீண் விரையம் செய்யாது தங்கள் நன்மைக்கான வழிகளில் செலவளிக்கவேண்டுமென்றும் கூறினார்.

கூட்டம் 9-30 மணிக்கு முடிவு பெற்றது.

உடுமலைப்பேட்டையில் சுயமரியாதைப் பிரசாரம்

31-5-34 வியாக்கிழமையிலும், 1-6-34 வெள்ளியிலும் முறையே தோழர் எம். பி. சாமி அவர்கள் தலைமையிலும் தோழர் மருதையப்பா தலைமையிலும் தோழர்கள் ப. ஜீவானந்தம், எஸ். வி. லிங்கம் ஆகிய தோழர்கள் "உலகத்தில் ஏன் பணக் கஷ்டம் ஏற்பட்டது. என்பது பற்றியும், மறு நாள் "தொழிலாளர் துயரமும் சமதர்ம ஆவசியமும்" என்பது பற்றியும் விரிவாகவும் தெளிவாகவும் பேசினார்கள். கூட்டத்திற்கு சுமார் 1000 பேர்களுக்கு மேலாகவே வந்திருந்தனர் என ஒருநிருபர் எழுதுகிறார்.

The Cloven Foot.

பிளவு கால்.

(தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல்.)

கூவியர் (Cuvier) என்ற ஓர் பிரபல உடற்கூற்று நூலாசிரியர்(Anatomist) பிரஞ்சு நாட்டில், சென்ற 50 வருஷத்திற்கு முன்பு வாழ்ந்து வந்தார். அவரிடம் எந்தப்பிராணியின் எலும்பைக்காட்டினாலும் அது எவ்வளவு சிறிதாயினும், அதனைக்கொண்டு, எந்தப் பிராணியின் எலும்பென்று சொல்லுவார். உடற்கூற்று விசாரணையில் அவர் அவ்வளவு மெஞ்ஞானமடைந்தவர். அவரைப்பற்றி, அவருடைய வல்லமையைக்காட்ட, ஓர் கதையுண்டு.

ஒரு நாள் சாத்தான் (Satan) என்ற பிரபல பிசாசு, மாறுவேஷம் பூண்டு, தலையில் கொம்புடனும், பிளவு காலுடனும், கூவியர் முன்பு நின்று, "உன்னை நான் விழுங்கப் போகின்றேன்" என்று பயமுறுத்தியது. இதனைக்கண்ட கூவியர், புன்சிறிப்புக் கொண்டு, "Horns and Hoofs you cannot devour me" "கொம்பும், பிளவுகாலும் உடைய நீயென்னை விழுங்க முடியாது" என்றாராம்! இதன் கருத்து என்னவெனில், நீ புல்லைத் தின்னும் சீவன், ஆதலின் மாம்சத்தைத் தின்ன முடியாது என்ற பொருளைக்குறிக்க அந்த விடை அவர் அளித்ததாகும். அது முதற்கொண்டு வெறும் பயமுறுத்துப் பேச்சை பிளவுகாலுடையோர் பேசுவர் என்ற பழமொழி வழங்கி வருகின்றது. படாடோப பயங்கர வார்த்தைகளை உபயோகிக்கின்றவர்களை "பிளவு கால்" Cloven Hoof, என்று அழைப்பதுண்டு. செய்கையில் காட்டாத வெறுஞ் சொல் வீணர்களை "பிளவு கால்" காட்டுகின்றவர்களெனினும் பொருந்தும்.

இத்தியாதி பிளவு கால்வீணர்கள், தற்போது உலகில் நிறைந்துளார். இத்யாதி கூட்டத்தார்களும் அனேகருண்டு. நமது நாளில் அரசியல் துறையில் தோன்றியுள்ள பாஸிஸ்ட் (Facist) களும், நாஸிஸ் (Nazis) களும், இத்தகையவர்களே. இவ்விரு கூட்டத்தாரைப்பற்றி சென்ற வாரம் வெளிவந்த "புரட்சி"யில் நமது தோழர் "சோஷியலிஸ்ட்" எழுதியுள்ளதை நமது வாசகர்கள கவனித்திருப்பார்களென்று நம்புகிறோம். இவ்விரண்டு இயக்கங்களும், "சோஷியலிஸ்ட்" கூறியபடி, கொடுங்கோன்மையில் முதல்தர ஆட்சிகளாகும். இந்தக் கட்டுரை சம்பந்தமாக நாம் என்ன சொல்ல வந்தோமென்றால், இவ்விரண்டு கூட்டத்தாரைப்பற்றி நமது நாட்டார் உள்ளதை உள்ளபடி தெரிந்துகொள்ளவேண்டும். உலகம் இருக்கும் மூடத்தனத்தில், முக்கியமாக, உழைப்போர் இருக்கும் அக்கியானத்தில், இவ்விரண்டு இயக்கங்களும் உலக மக்களை விழுங்கி விடும் போலும். ஆனால் கூவியரைப்போன்ற அஞ்சா நெஞ்சர்கள் தான், இவ்விபக்கங்களின் இறைச்சல்களை எதிர்த்து செல்லக்கூடியவர்கள். இவ்விரு கூட்டங்கள் பிறபல பிரசாரங்களைச் செய்து வருகின்றன, ஆனால், உள் நுழைந்து பார்க்கின்றவர்களுக்கு இக்கூட்டத்தாரின் பிளவு கால் தோன்றுமேயொழிய வார்த்தை ஜாலத்தால் மயங்குகின்றவர்களுக்கு எல்லாம் வெண்மையாகவே தோன்றும்.

தனது ஆட்சியின் நிலைமையைக்குறித்து சொல்லும் போது, பாஸிஸ்ட் தலைவனாகிய முசோலினி, நேற்று தனது பிளவுகாலை செம்மையாகக் காட்டிவிட்டார். அரசியல் வருமானம் மிகவும் குறைந்து போயிற்றாம். குறித்த குறைவுக்கும் அதிகமாகக் குறைந்ததாம்!! இதற்கு விமோசனம், ஒன்றே என்றார். அதாவது இத்தாலியர், வீராவேசத்தைக்காட்டவேண்டுமாம்! உழைப்போருடைய கூலியைக் குறைக்க வேண்டுமாம்!! ஜனநாயகம் ஓர் மோசடி, சட்டசபை இன்னுமோர் மோசடி; பாஸிஸ்டுகளுடைய "கூட்டுறவு டிபார்ட்டுமெண்டுகளால் (Corporate State) இத்தாலி தேசத்திற்கு வானுலகமே வரப்போகின்றது" என்று கூறிய முசோலினி பாஸிஸ்ட் ஆட்சி ஆரம்பித்த 10 வருஷத்திற்குள், தனது நாட்டின் கேவல நிலைமையைத் தானே குறிப்பிட நேரிட்டது. இவ்விரண்டு ஆட்சி நடத்தைகளைப்பற்றி அறிஞர் என்ன கூறுகின்றார்களென்று சற்றுப் பார்ப்போம்.

பாஸிஸமும், நாஸிஸமும் என்ன செய்தன? பத்து வருஷ காலமாக, பாஸிஸம் செய்த வேலையை நாஸிஸம் ஒன்பது மாதத்தில் செய்து முடித்ததாம். அவை யாவன:— உழைப்போர் இயக்கம் நாசமாக்கப்பட்டது. அரசியல் சுதந்திரமும், மன சுதந்திரமும், கொல்லப்பட்டன. எதிரிகளைக் கொன்று வேலை செய்யாத சோம்பேறிகளுக்கு வேலை கொடுக்கப்பட்டது. தங்களை எதிர்த்தவர்களை எல்லாம், ஜெயில்களில் போட்டும், நாடு கடத்தியும், தெருக்களில் பிச்சைஎடுத்துண்ணத் துறத்தியும் தங்களை எதிர்க்க யாருமில்லாமலே செய்து கொண்டன, பொது மக்களுக்கோ, ரொட்டியோ, வெண்ணையோ, வேலையோ, பயமற்ற வாழ்வையோ, கொடுத்தபாடில்லை. இவர்களுக்கு கொடூர விளையாட்டுகளைக் காட்டப்பட்டது. சமதர்மிகளென்ற பேச்சே நாராசமாகப் பாவித்து, அந்தக் கூட்டத்தார் யாராயிருப்பினும், அவர்களை ஜெயில்களில் சித்திரவதைக் குட்படுத்தப்பட்டது. இவர்கள் தலைவர்களை இம்சித்ததென்ன? ஜெயில்களில் லட்சக்கணக்கானவர்களை சிறையிலிட்டதென்ன! சட்டசபை மாளிகையைக் கொளுத்தியதென்ன! டாக்டர்களையும், லாயர்களையும், உபாத்தியார்களையும், மெஞ்ஞானிகளையும் வதை செய்ததென்ன! யூதர்களை இம்சித்ததென்ன? நேற்று சொன்ன தேன் மொழிகளென்ன? இன்று என்ன இருக்கின்றது? எங்கும் ஆவேசமும், மிருகத்தன்மையும், கொடுமையும், சீவனக் குறைவுமே!! இவ்விதமாக Current History யில் வரையப்பட்டுள்ளது. இதுதான் பாஸிஸமாம்! இதுதான் நாஸிஸமாம்!.

இந்தப் பிளவுகால் இயக்கம், நம்மை ஆளும் ஆங்கில நாட்டிலும் தலைகாட்டி வருகிறது. இதற்கு, Siroswald Mosley தான், பெரியார். இவற்றை ஆதரிப்பதற்குப்பலத்த கோடீஸ்வரர்கள் முன்வந்துள்ளார். அயர்லாண்டிலும் இத்தோற்றம் தோன்றியுள்ளது. எங்கும் இதே பேச்சாகவே கோஷ்டிகள் கிளம்பி வருகின்றன. நேற்று ஆஸ்டிரிய நாடும் இந்த வர்ணத்தைப் பூண்டது. "விநாசகாலே, விபரீத புத்தி" என்பது போல் நமது நாட்டிலும் இந்தக் கூக்குரல் எட்ட ஆரம்பித்தது. சுபாஸ் போஸூம் வெளிநாட்டிலிருந்து கொண்டு, இந்தியாவுக்கு பாஸிஸம்தான் உவந்தது என்று கூறுகின்றாராம்! நேற்றுஜவஹர்லாலும் ஒருவாறுகபாஸிஸத்தைத் தழுவிப் பேசியதாகக் கூறப்பட்டு, அது இன்னொருவாறாக மறுக்கப்பட்டுளது. இவர்களும் ஒரு காலத்தில் சோஷியலிசத்தைத் தழுவிப் பேசியவர்களே! இன்று இவர்கள் தங்கள் பூர்ஷுவா மாபின்படி, பிளவுகாலைக்காட்டிவர ஆரம்பித்தது, ஆச்சரியமல்ல. பல நாளாகத் தொழிலாளர் சார்பாக நடித்து, ஒரு காலத்தில் பிரஞ்சு ஆட்சிக்கு அதிபதியாக வந்த பிரயான்ட் (Briand) முதலாளி ஆட்சியைப் பலப்படுத்த ஆரம்பித்தார். அதனோடு போகாமல் உழைப்பவர்களை அடக்கியும் விட்டார். மற்றோர் தூரதேசமாகிய தென் ஆப்ரிகா (South Africa) அதிபதியாகிய Smuts-ஸ்மடஸ் பெரியாரும் முதலில் உழைப்பவர்களைத் தழுவி, தனது தற்கால பதவிக்கு வந்தவரே! இன்று உழைப்பவர்களை அடக்கி ஆண்டு வருகின்றார். முசோலினியும் ஒருகாலத்தில் தொழிலாளர்களை ஆதரித்தவரென்று சொல்லப்படுகின்றது. இவ்விதமாக தொழிலாளர் கட்சியை யார்தான் முதலில் ஆதரிக்கவில்லை? யார்தான் பிறகு வஞ்சிக்கவில்லை? பிளவு காலைக் காட்டாத தொழிலாளர் தலைவர் சிறுபான்மையே. தொழிலாளருக்கு உயிர் விடுவேனென்று ஒரு காலத்தில் கூறிய ஆங்கிலத் தலைவர்கள், எத்தனை பேர் இன்றைக்கு வஞ்சிக்க ஏற்பட்டுள்ளார்? மெக்டொனால்ட்டுகள், தாமஸ்கள், கிளையன்ஸ்கள் எத்தனை பேர் இன்றையதினம் உன்னத பதவியிலிருந்து கொண்டு ஏகபோக போகத்தோடு வாழ்கின்றனர்! எங்கும் இந்த வஞ்சனையே குடிகொண்டுளது. தரித்திர நாராயணனுக்குத்தான் இனிவரும் சுயராஜ்யமென்ற நமது காந்தியார் இன்று பம்பாயில் லட்சம் ரூ. தெருவில் தியங்குங் கால் எங்கே நடந்து செல்கிறார்? அடிதண்டமிட்டுத் திருப்பதிக்கு நடந்து செல்லும் பக்தர்களைப் போல் தாழ்த்தப்பட்டோர் பால் உழைக்க நடந்து செல்லும் காந்தியார் தீண்டாமை ஒழியுங்கள் என்று கூச்சலிடுகின்றாரே ஒழிய அந்தக் கூட்டத்தார் அன்றாடம் தன்னை

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

மாஸ்கோ துறைமுக நகரமாகின்றதாம்.

ரஷியாவின் தலை நகரான மாஸ்கோ கடல் துறைக்கு 700 மைல் தூரத்திலிருக்கிறது. பெரிய கால்வாய் ஒன்று வெட்டி சமுத்திரத்திலிருந்து 10000 டன் நிறையுள்ள கப்பல்கள் வந்து நிற்கக் கூடிய பெரிய துறைமுகமொன்று கட்டிமாஸ் கோவைத் துறைமுகப்பட்டினமாக்க ஓர் உத்திரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. இந்த த் திட்டப்படி பல விரிவான கால்வாய்கள் ஏற்பட்டு "வால்கா" ஆற்றில் இணைந்து கருங்கடலோடு சம்பந்தப்பட்ட துறைமுகப் பட்டினமாக மாஸ்கோவைச் செய்வர். இந்த வேலையை அமெரிக்கன் இஞ்சினியர்கள் செய்வர். அமெரிக்கர்களே அதற்கானபணச் செலவையும் முதலில் போடுவர் துறைமுக வேலையோடு மாஸ்கோவில் ஒரு சிறிய ராணுவத் துறையைக் கட்டுவதற்கும் வேண்டிய சிமிண்டை கணக்கில்லாமல் கொண்டு வந்து கொட்டுவார்கள்.

சிங்கப்பூர்தோழர் ஓ. ராமசாமி (நாடார்) அவர்கள் தாய்நாடு வருகை.

சிங்கப்பூரில் பிரபல வர்த்தகரும் சுயமரியாதை இயக்க அபிமானியும் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களின் மலாய் நாட்டு சுற்றுப்பிரயாணத்தின் போது பேருதவியாக இருந்தவருமான தோழர் ஓ. ராமசாமி (நாடார்) அவர்கள் சிங்கப்பூரிலிருந்து தமது தாய்நாடு வந்து சில மாதங்களாகின்றது. அவர் இப்போது தனது பிறப்பிடமாகிய மணச்சை என்ற கிராமத்தில் தாமதித்து வருகின்றார் இன்னும் பத்து தினங்களில் மீண்டும் சிங்கப்பூர்புறப்பட்டுப் போவதாகச் சொன்னார். தோழர்கள் அ. பொன்னம்பலம் ராம சுப்பையா, அறு ராம சொக்கலிங்கம் ஆகியவர்கள் மணச்சைக்குச்சென்று நலம் விசாரித்து வந்தார்கள்.

தஞ்சையில் சுயமரியாதைப் பிரசாரம்.

தஞ்சாவூர் சுயமரியாதைச் சங்கத்தின் ஆரவில் தஞ்சாவூர் சிவன் கோவில் பக்கமுள்ள திடலில் 28-5-34 ந்தேதி மாலை 6-30மணிக்கு பள்ளி அக்கிராகாரம் தோழர் ஆழவந்தார் அவர்கள் தலைமைவகித்து முன்னுரை கூறினார். அதுசமயம் பூவாளூர் தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் "சுயமரியாதை இயக்கம்" முத்துப்பல்லக்கு, உற்சவம், வீண்டாம்பீகசெலவு' பகுத்தறிவு, மதப்புரட்டு, புரோகிதக்கொடுமை" ஆகியவைகளைக் குறித்து விரிவுரையாற்றினர். தோழர் ராம சுப்பு அவர்கள் சமதர்மக்கீதங்கள் பாடினர். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இரவு 8-30மணிக்கு இனிது முடிவடைந்தது.

இரண்டாம் நாள் பொதுக் கூட்டம்.

இவ்வூர் கீழமார்க்கெட்டு முன்பாகவுள்ள திடலில் 29-5-34 ந்தேதி மாலை 6-30மணிக்கு பள்ளி அக்கிராகாரம் தோழர் ஆள்வந்தார் அவர்கள் தலைமையில் இரண்டாம்நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் விஜயம் செய்தார்கள். தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் "மூடநம்பிக்கை, செடில்உற்சவ கலவரம், யாகத்தில் உயிர் கொலை, தொழிலாளர்கள் துயரம், சமதர்மத் தத்துவம்" என்பவைகளைக் குறித்தும் நீண்ட நேரம் பிரசங்கம் செய்தார். தோழர் ராம சுப்பு அவர்கள் சமதர்மக்கீதங்கள் பாடினர். தலைவர் முடிவுரையுடன் இரவு 8-45மணிக்கு கூட்டம் இனிது முடிவடைந்தது.

திருச்சி—திருநெல்வேலி முனிசிபாலிட்டி விஷயம்.

ஜஸ்டிஸ் கட்சித்தலைவருடன் தமிழ் ஜில்லாக்கள் விஷயமாகத் தோழர் ஈ. வெ. ராமசாமி 7-6-34 தேதி காலை பேசிக்கொண்டிருந்த பேச்சுவார்த்தைகளின் மத்தியில் திருச்சி-திருநெல்வேலி முனிசிபாலிட்டிகள் விஷயமாய் பிரஸ்தாபித்ததில் கட்சித்தலைவர் ஸ்தலஸ்தாபன மந்திரி ஹோதாவில் தான் அந்தப்படி நடந்து கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதைப்பற்றியும் வேறு விதமாய் நடக்கும் விஷயத்தில் உள்ள கஷ்டங்களைப்பற்றியும் விவரித்துக் கூறினர். எது எப்படி இருந்தாலும் தமிழ் ஜில்லாக்களில் பிளவும் மனக்கசப்பும் பெரிதும் ஏற்படாமல் இருப்பதற்கு இம்முனிசிபாலிட்டிகளின் விஷயங்கள் ஏதாவது ஒரு விதமாக சமாதான முறையில் பைசல் செய்யவேண்டும் என்று விரும்புவதாகத் தோழர் ஈ. வெ. ரா. தெரிவித்துக்கொண்டதின் பேரில் தன்னால் கூடியவரை முயற்சி எடுத்துக்கொள்வதில் ஆக்ஷேபணை இல்லை என்று சொன்னதாகவும், ஏதாவது ஒரு வழியில் சமாதானமான முடிவு ஏற்படக்கூடும் என்று தோழர் ஈ. வெ. ரா. எதிர்பார்ப்பதாகவும் தெரிய வருகிறது.

சீர்திருத்தத் திருமணம்.

மணமகள்.	மணமகன்.
தோழர்	தோழர்
A. K. பார்கவி செய்சியர் B. A.	V. N. குப்தா M. A.

நிகழுமிடம்.	நிகழும் நேரம்.
"குப்தா விலாஸ்"	14—6—34
ஆத்தூர் S. I.	வியாழக்கிழமை
சேலம் ஜில்லா.	காலை 9-மணி.

திருமணத்தை நடத்தி வைப்பவர்.
சுயமரியாதை இயக்கத் தலைவர்,
தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள்.

தோழர்களின் வரவை அன்புடன் எதிர்பார்ப்பவர்கள்.

ஆத்தூர், 10—6—34. குப்தா பிரதர்ஸ்.

நாகம்மாள் பாட்டுப்பறிமுதல்

போலீஸ் கமிஷனர் கோபம்

சுங்கப்பட்டாணி
25—5—34

தோழர் ஈ. வெ. ரா. நாகம்மாள் அவர்கள் காலஞ்சென்றது குறித்து தோழர் டி. அப்துல்சுபஹானல் ஒரு அநுதாபப் பாடல் பாடப்பெற்று வெளியிடப்பட்டது. அதன் காரணமாக இவ்வூரில் சில கத்தோலிக், முஸ்லீம்கட்கு விரோத உணர்ச்சி ஏற்பட்டு, போலீஸ் கமிஷனரிடம் விண்ணப்பித்துக் கொண்டதும், கமிஷனர் தோழர் சுபஹானை அழைத்து அப் பாடலில் துவேஷமாயுள்ள வாக்கியங்களடங்கியிருப்பதாகவும், அதனால் பொதுஜனங்கள் பரபரப்படைந்ததாகவும் சொல்லி ஷைபாடல் பிரதிகளை வாங்கி மேலதிகாரிகளுக்குத் தெரிவித்துத்தருவதாகச் சொன்னார். அனால் ஷை பிரதிகள் தடங்கள் செய்தது நியாயமல்ல வென்றும் எவ்வித ஆட்சேபகரமான குறிப்பும் அப்பாடலில்லை என்பதாகவும் தோழர் சுபஹான், கெட்டா கவர்ன்மெண்ட் லீக்கல் அட்வைஸர், போலீஸ் கமிஷனர் முதலியோர்கட்கு விண்ணப்பம் செய்துகொண்டதின் குறிப்புகள் கீழ் வருமாறு.

"பிரஸ்தாபப் பாடல் எனது சுயமுயற்சியின் பேரில் எழுதப்பட்டதாகும். அப் பாடலை பொது மக்கள் பார்க்க வேண்டுமெனக்கேட்டுக்கொண்டதிற்கிணங்க சுமார் (500) பிரதிகள் அச்சிட்டேன். அதைச்சிலர் ஆட்சேபிப்பதாய் போலீஸார் தடை செய்திருக்கிறார்கள்"

"விவாதத்திற்கு அஸ்திவாரமாயுள்ள பாடலைப்பற்றி பொதுஜனங்கள் ஆத்திரமடைய வேண்டிய நியாய மேகிடையாது அப் பாடலில் ராஜ நிந்தனையாயுள்ள எழுத்தோ ஒரு கட்சியாரை இகழ்ச்சிப்படுத்தக்கூடிய சொற்களோ கிடையாது. ஒரு மா பெரும் தலைவரின் மனைவியார் காலஞ்சென்றது குறித்துப் பாடப்பட்ட அநுதாபப் பாடலே யாகும்"

"அப் பாடலில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் தோழர் ஈ. வெ. ராமசாமிப் பெரியாரைப் பற்றி நான் அறிந்திருக்கிறேன். அன்னாரின் முக்கிய கொள்கை என்ன வெனில் உலகமக்கள் யாவரும் சமூக பொருளாதார வாழ்க்கையில் சமத்துவமாயிருக்க வேண்டுமென்பதே யாகும். இவ்வியக்கம் சுமார் ஏழு எட்டு வருடங்களாக இந்தியாவிலும், தமிழர்கள் குடியேறியுள்ள நாடுகளிலும் பலத்த பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது"

"இது சமயம் என்மீது துவேஷப்பட ஒரு சிலர் காரணமாயிருந்திருக்கிறார்கள். இருந்து வருகிறார்கள் எனவே அரசாங்கத்தார் எனது பிரதிகளை வாபஸ்செய்ய வேண்டியதுடன் இனிமேலும் இவ்விதமான முறண்பாடுகள் நடக்காதிருக்கும் படி கேட்டுக்கொள்கின்றேன்" என்பதாகும்.

சுமத்ரா-மீடானில் சீர்திருத்த விவாகம்.

1934 ஞு மே-மீ 13-உ ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பக்கியூன் என்னும் தோட்டத்தில் உத்தியோகத்திலிருக்கும் தோழர் பா. அ. கண்ணன் அவாகள் புதல்வியாகிய கன்னிமாரி முத்து அவர்கட்கும், மிடான், தோழர் பி. கண்ணப்பன்என்னும் வாலிபருக்கும் ஷை தோட்டத்திலேயே திருமணம் நடைபெற்றது.

சென்னையில்

ஜஸ்டிஸ் கட்சிக் கூட்டம்.

ஜஸ்டிஸ் கட்சியின் தலைவரான முதல் மந்திரி தோழர் பொப்பிலிராஜா அவர்கள் இம்மாகாணத்தின் பல தலைவர்களின் விருப்பப்படி ஒரு ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் மகாநாட்டை 7—6—34 தேதி தனது பங்களாவில் கூட்டினார். அக்கூட்டத்திற்குத்தமிழ், தெலுங்கு, மலையாளம் கன்னடம் ஆகிய எல்லா ஜில்லாக்களின் சார்பாகவும் முக்கியமான பிரமுகர்கள் சுமார் 100 பேர்களுக்குக் குறையாமல் விஜயம் செய்திருந்தார்கள்.

கூட்டம் ஆரம்பமானதும்கூட்டம் கூட்டிய தலைவர் முதல் மந்திரி பொப்பிலி ராஜா அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களைப்பொதுவாக வரவேற்று, சிறப்பாக தோழர் சர். ஆர். கே. ஷண்முகம், திவான்பகதூர் முனுசாமி நாயுடு, ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் தனது அழைப்பை ஏற்று கூட்டத்திற்கு விஜயம் செய்திருப்பதைப்பற்றிபாராட்டிப்பேசி எல்லோருக்குமாக நன்றி செலுத்தி நல்வரவு கூறி நடவடிக்கையைத் துவக்கினார்.

அதில் கூட்டம் கூட்டப்பட்டதின் நோக்கத்தை எடுத்துச் சொல்லுகையில், கட்சியில் பலமான ஒற்றுமை ஏற்படவும் கட்சி ஸ்தாபனங்களைப் பலப்படுத்தவும், வரப்போகும் இந்திய சட்டசபைத் தேர்தலில் கட்சியின் சார்பாய் அங்கத்தினர்களை நிறுத்தி வெற்றி பெறச் செய்யவும் தென்னிந்திய நலவுரிமைச் சங்கமானது பார்ப்பனரல்லாதார் சங்கம் என்று சொல்லிக்கொண்டு ஒரு கூட்டத்தாரைச் சேர்க்காமல் ஒதுக்கி வைத்திருக்கும் சங்கம் என்று இனி சொல்லப்படுவதற்கு இடம் இல்லாமல் தென்னிந்திய எல்லா மக்கள் சங்கமாகவும் இருக்கவேண்டும் என்று பல பிரமுகர்கள் கருதிவரும் விஷயத்தை யோசிக்கவும், சமீபத்தில் ஒரு S. I. L. F. பொது மகாநாடு கூட்டவுமான காரியங்களின் அவசியத்தைப்பற்றி எடுத்துச் சொல்லி அதற்காகப் பிரமுகர்களின் அபிப்பிராயம் தெரியவேண்டும் என்றும் பேசி முடித்ததும் தோழர்கள் Dr. சி. நடேசன், ஈ. வெ. ராமசாமி, ராஜா சர். அண்ணாமலை, சௌந்திரபாண்டியன் ஆகியவர்களை முறையே இவ்விஷயங்களில் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைக்கூறும்படி கேட்டுக் கொண்டார். டாக்டர் நடேசன் அவர்கள் பொப்பிலி ராஜா இயக்கத்தக்கு செய்த நன்மைகளையும், அவரது ராஜ தந்திரத்துவத்தையும் உதார குணத்தையும் தலைமைக்கு தகுதியையும் புகழ்ந்துகூறிவிட்டுப்பார்ப்பனர்களைகண்டிப்பாகசேர்த்துக் கொள்ளக்கூடாது என்று கூறினார்.

பிறகு தோழர் ஈ. வெ. ராமசாமியின் அபிப்பிராயம் தெரிய வேண்டுமென்று மற்றும் பலரும் விரும்பியதற்கு இணங்க அவர் பேசியதாவது.

ஈ. வெ. இராமசாமி.

தலைவரவர்களே! தோழர்களே!!

தலைவரவர்கள் தெரிவித்த விஷயங்கள் இயக்க நலனைக்கருதி அவசியம் கவனிக்கத்தக்கதாகும். எல்லா விஷயத்தையும்விட நமது கொள்கை என்ன? திட்டம் என்ன? என்பதைப்பொது ஜனங்கள் அறியும்படி செய்ய வேண்டும். ஜஸ்டிஸ் கட்சி என்றால் மீ 4000 ரூபாய்சம்பளத்துக்கும் மந்திரி பதவிக்கும் ஊர்சிரிக்கச் சண்டை போட்டுக்கொண்டிருக்கும் கூட்டம் என்று இனியும் பாமர ஜனங்கள் சொல்லும்படி நாம் விட்டுக்கொண்டிருக்கக் கூடாது. காங்கிரசுக் காரர்கள் என்பவர்களின் உள் எண்ணமும், நாணயமும் எப்படி இருந்தாலும் அவர்கள் ஏதோ இரண்டொரு கொள்கைகளைச்சொல்லி, அதைப்பெரிதாக்கிக் காட்டி அதற்காக அடியும் உதையும், நஷ்டமும் கஷ்டமும் சிறைவாசமும் பெற்றவர்கள் என்கின்ற பெயரை பெற்றிருக்கிறார்கள். அவர்களோடு இப்பொழுது திடீரென்று போட்டி போடுவதென்றால் அதுவும் ஒரு விளக்கமான யாவருக்கும் தெரியும்படியான ஒரு கொள்கையும், திட்டமும் இல்லாமல் போட்டி போடுவதென்றால் சுலபமான காரியமல்ல என்பதே எனது அபிப்பிராயம். "கட்சிக்கு கொள்கை இருந்தாலும் இல்லாவிட்டாலும் பணமும், அதிகாரமும் செல்வாக்கும் இருந்தால் எப்படியும் தேர்தலில் வெற்றி பெற்று விடலாம்" என்கின்ற தைரியம் சிலருக்கு உண்டு என்பதையும் அதுவும் ஒரு அளவுக்கு உண்மை யென்பதையும் நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் அந்த தைரியம் தனிப்பட்டவர்களின் நன்மைக்குப்பயன்படுமே தவிர ஒரு இயக்கத்துக்கு — பொதுஜன நன்மைக்கு பயன் படாது. சமீபகாலமாக ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் அதிகாரத்திலும், பதவியிலும் இருக்கிறவர்கள் கட்சி கொள்கை விஷயத்தில் போதிய லக்ஷியம் எடுத்துக்கொள்ளவில்லை யென்றும் தங்கள் சுயநலத்தைவிட மற்றொன்றையும் சிறிதும் கவனிக்கவில்லை என்றும், கட்சி கொள்கைக்கு விரோதமாகக்கூட பல காரியங்கள் செய்யப்பட்டுவிட்டன என்றும் கட்சி ஜனங்களுக்குள்ளாகவே சொல்லிக்கொள்ளப்படுகிறதுடன் மற்றும் பலவிதமான புகார்களும் சொல்லிக்கொள்ளப்படுகின்றன. ஆனால் இப்படிச் சொல்லிக் கொள்ளப்படுவதற்கும் புகார்களுக்கும் ஆதாரமில்லை என்று கூறலாம். ஆதாரமில்லை என்பதை பொதுஜனங்களுக்கு மெய்ப்பிக்க வேண்டாமா? மற்றும் நமது எதிரிகள் இப்படிப்பட்ட விஷயங்களை தங்களுக்கு அனுகூலமாய் உபயோகித்துக்கொள்ளாமல் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டாமா? நமது சொந்த செல்வத்தையும், செல்வாக்கையுமே எல்லாவற்றிற்குமே சமாதானமாக ஆக்கிக்கொள்ளலாம் என்று சிலர் நினைத்தால் கட்சியில் உள்ள செல்வமும், செல்வாக்கும் இல்லாத மக்களின் கதி என்ன ஆகும் என்பதை யோசித்துப்பாருங்கள். இவர்களுக்கு ஒரு கொள்கையோ, இவர்கள் மீது கூறப்படும் புகார்களுக்கும், குற்றங்களுக்கும பதில் கூறுவதற்கு,தகுந்தஉண்மையான ஆதாரங்களோ இல்லா விட்டால் இவர்களுக்கெல்லாம் கட்சியில் இடமோ கட்சியின் பேரால் வெற்றியோ, எப்படி கிடைக்கும்.

ஜஸ்டிஸ் கட்சி என்றால் ஜமீன்தாரர்கள், முதலாளிமார்கள் கட்சியே தவிர பொது மக்கள் கட்சி அல்ல என்று சொல்லப்படுவது இப்போது மிகமிக சகஜமாகிவிட்டது. இதை நாம் பொய்யாக்கி காட்டா விட்டால் கட்சியில் உள்ள உண்மை உழைப்பாளிகளுக்கு இதைவிட வேறு அவமானம் வேண்டியதில்லை.

ஆதலால் தகுந்த வேலைத்திட்ட முறைகளை ஏற்படுத்தி பாமர ஜனங்களுக்கு நன்றாய் பிரசாரம் செய்து நமது எதிரிகளின் விஷமப் பிரசாரத்தை தகர்ப்பதுடன் ஏழைப் பொது மக்களுக்கு பயன்படத் தக்க முறையில் உழைத்தாகவேண்டும். வெறும் ஸ்தாபனங்கள் அமைப்பதால் ஒரு பயனும் ஏற்பட்டு விடாது. ஸ்தாபனங்கள் பெரிதும் சுயநலக்காரர்களின் விளம்பரத்துக்கு ஒரு சாதனமாகும். உழைப்பும் வேலை செய்து காட்டுவதுமே தான் நமது எதிரிகளைத் தோற்கடித்து நமக்கு நல்ல வெற்றியைக்கொடுக்கும்.

இந்திய சட்டசபைத் தேர்தல்.

அடுத்தபடியாக இந்திய சட்டசபைத் தேர்தலைப்பற்றி பேசப்பட்டது. இந்த சமயத்தில்இது ஒரு முக்கியமான விஷயம் என்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். நமது கக்ஷிக்கு ஒரு கெட்டபெயருண்டு. அதைப்பொய்யென்று மறுக்கவும் என்னிடம் போதிய ஆதாரமில்லை. என்னவென்றால் "ஜஸ்டிஸ் கக்ஷிக்காரருடைய நாட்ட மெல்லாம் மாகாணசட்டசபையிலேயே ஒழிய, இந்திய சட்டசபையைப் பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை" என்று சொல்லப்படுவதாகும். இதற்கு என்ன விதமான உள் எண்ணம் கற்பிக்கப்படுகின்றதென்றால் "மாகாண கவுன்சிலில் இருந்தால் மந்திரிவேலை பெறலாம் அல்லது மந்திரிகளுக்கு துணை புரிந்து நமது வாழ்க்கை நலத்துக்கு ஏதாவது பயன் அடையலாம்" என்று கருதி இப்படி அலக்ஷியமாய் இருப்பதாக உள் எண்ணம் கற்பிக்கப்படுகிறது. இந்தப்படி சொல்லுபவர்களுக்கு அநுகூலமாகவே சம்பவங்களும் இருந்து வருகின்றன.

இதன் பயனாகவே தென்னிந்தியாவைப் பற்றியும் தென்னிந்திய மக்களைப்பற்றியும் வட இந்தியர்கள் கேவலமாய் மதிக்கும்படியும் தென்னிந்தியப் பார்ப்பனர்கள்தான் தென்னிந்திய பொது நல ஊழியர்கள் என்றும் அவர்களே தேச பக்தர்கள் என்றும் கருதும்படி செய்யப்பட்டதுடன பார்ப்பனரல்லாதார் என்றால் தேசத் துரோகிகள் என்றும், அன்னிய ஆக்ஷிக்கும் அதன் கொடுங்கோன் தன்மை என்பதற்கும் துணை புரிந்து சுய

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க.

புரட்சி

ஈரோடு 1934- ஜூன் மீ 10-உ

இந்திய சட்ட சபைத்தேர்தல்

தோழர் சத்தியமூர்த்தி யாரை? ஏமாற்றப்போகிறார்?

தோழர் S. சத்தியமூர்த்தி சாஸ்திரிக்கு இப்போது சிறிது நெருக்கடியான சமயம் என்று சொல்லலாம். ஏனெனில் அவர் எப்படியாவது சமீபத்தில் நடைபெறப்போகும் இந்திய சட்டசபை அங்கத்தினர் பதவிக்குஒரு அபேக்ஷகராகநிற்க வேண்டுமென்று கருதி இருக்கிறார். சென்னையில் நிற்பதற்கு அவருக்கு தைரிய மில்லை; இருக்கவும் நியாயமில்லை. ஏனென்றால் சென்னை ஜனங்கள் தோழர் சத்தியமூர்த்தியை நேரில் அறிவார்கள். இந்திய சட்ட சபையின் சென்னைத் தொகுதியானது சென்னை சட்டசபையின் யுனிவர்சிட்டித்தொகுதி மாதிரி 100-க்கு 95பேர்கள் பார்ப்பன ஓட்டர்களாய் இருக்கும் தொகுதியல்ல. பார்ப்பனரல்லாதார் பெரும்பான்மையோருடைய ஓட்டுகளைப் பெற்றாகவேண்டும். ஆதலால் அங்கு சென்னையில் நின்றால் கட்டின பணம் வாபீஸ் பெருவது கூட சில சமயங்களில் கஷ்டமாகி விடும்.

நமது மாகாணத்தில் பொதுவாகப் பார்ப்பனர்களுக்கு-சிறப்பாக வர்ணாச்சிரமப் பார்ப்பனர்களுக்கு தகுதியாய் இருக்கும் தொகுதி தஞ்சை, திருச்சி ஜில்லாக்களின் தொகுதியாகும். இந்த ஜில்லாக்களின் பார்ப்பனரல்லாதாரே உத்தியோகம் பெறவும் மந்திரியாகவும் ஸ்தலஸ்தாபனங்களில் தலைமைப் பதவி அங்கத்தினர் பதவி பெறவும் அதுவும் பெரும் வரையில் மாத்திரமே பார்ப்பனரல்லாதார் என்கின்ற பேச்சுப் பேசுபவர்களேயொழிய மற்றப்படிப் பார்ப்பனரல்லாதாரின் பொது விஷயங்களில் கவலைசெலுத்துவதென்பது அருமையிலும் அருமையான காரியமாகும்.

இந்திய சட்ட சபைக்கு தஞ்சை திருச்சி ஜில்லா சேர்ந்து ஒரு தொகுதியாக ஆன காலமுதல் நாளது பரியந்தம் நமக்குத் தெரிந்த வரையில் அத்தொகுதிக்கு பார்ப்பனர்களே வந்திருக்கிறார்கள். அதுவும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை நசுக்கக் கங்கணம் கட்டிக்கொண்ட பார்ப்பனர்களும் வர்ணாச்சிரமப் பார்ப்பனர்களும் பார்ப்பன சமூகத் தலைவர்களுமே வந்திருக்கிறார்கள். அதிலும் சென்னை முதலிய வெளியிடங்களில் இருந்தவர்களும் இருப்பவர்களுமான பார்ப்பனர்களே இங்கு வந்து வெற்றிபெற்று வந்திருக்கிறார்கள். இதிலிருந்து திருச்சி, தஞ்சை பார்ப்பனரல்லாதாரின் வீரமும் சுயமரியாதையும் பார்ப்பனரல்லாதார் வகுப்பு அபிமானமும் எவ்வளவு என்று யாரும் சுலபமாய்த்தெரிந்து கொள்ளலாம். இப்படிப் பட்ட ஒரு தொகுதி இப்போது தோழர் சத்தியமூர்த்தி அவர்களுக்கு கேள்வி கேப்பாடு இல்லாமல் தாராளமாய் வழிதிறக்கப்பட்டு இருந்தும் அவருக்கு எதிர் பாராத ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

என்னவென்றால்? தஞ்சை,திருச்சி ஜில்லா பார்ப்பனர்கள் தங்கள் தொகுதிக்கு ஏதாவது ஒரு அபேக்ஷகரை ஆதரிக்க வேண்டுமானால் அவ்வபேக்ஷகர் பார்ப்பனராய் மாத்திரம் இருந்தால் போதாது அபேக்ஷகர் சொந்த ஹோதாவில் எவ்வளவு மோசமானவராய் இருந்தாலும் சனாதன தர்மத்தை எவ்விதத்திலும் குலைக்காதவராகவும் அதைக் காப்பவராகவும் இருக்க வேண்டும். இப்போது இந்திய சட்ட சபையில் சனாதன தர்மம் என்பதற்கு விரோதமாக இரண்டு மசோதாக்கள் இருக்கின்றன. ஒன்று தீண்டாமை விலக்கு மசோதா, மற்றொன்று கோவில் பிரவேசத் தடை நீக்கும் மசோதா, இவ் இரண்டு தவிர மற்றும் விவாக ரத்து, பெண்கள் சொத்துரிமை முதலிய மசோதாக்கள் ஆலோசனைக்கு வந்தாலும் வரலாம். சாரதா சட்டத்தை ஒழிக்க மறுபடியும் ஏதாவது சூழ்ச்சிகள் செய்யப்பட்டாலும் படலாம். இதனால்தான் தோழர் சத்தியமூர்த்தியின் நிலை சற்று நெருக்கடி என்று சொன்னோம். ஏனென்றால், தோழர் சத்திய மூர்த்தி இரகசியத்தில் உண்மையில் சனாதனதர்மிகளின் பிரதிநிதியாயும், வெளிப்படையில் வேஷத்தில் சனாதனிகளின் "விரோதியான" காங்கிரஸ்பிரதிநிதியாயும் இருக்கவேண்டி இருக்கிறது.

தீண்டாமை விலக்கு மசோதாவும் கோவில் பிரவேசத் தடை விலக்கும் மசோதாவும் காங்கிரசால் ஆதரிக்கப்பட்டுவிட்டது. இந்திய சட்டசபையில் சென்ற மூன்று நான்கு கூட்டங்களிலேயே இம்மசோதாக்களை நிறைவேற்றச் செய்வதற்காக தோழர் காந்தியவர்கள் தோழர் ஸ்ரீ ராஜகோபாலச்சாரியார் அவர்களை டெல்லிக்கு அனுப்பி ஒவ்வொரு மெம்பரையும் பார்க்கச் செய்து எவ்வளவோ பிரயாசைப் பட்டிருக்கிறார் என்பது யாரும் அறிந்ததே அன்றியும் காங்கிரஸ் கொள்கையும் தீண்டாமை விலக்கு என்றும், அதன் தற்கால நிர்மாணத் திட்டம் தீண்டாமை விலக்கும் தீண்டாதவர்களுக்கு சகல கோயில்களும் திறக்கப்படச் செய்யவேண்டியதென்றும் பொதுஜனங்கள் நம்பும்படி எவ்வளவோ காரியங்கள்செய்தாகி விட்டது. அதற்காகப் பொது ஜனங்களிடம் ரூ 10 லக்ஷக்கணக்காக பணமும் வசூலித்தாய்விட்டது. ஆதலால் காங்கிரசுக்காரர் என்று சொல்லிக் கொள்ளுகின்றவர்கள். ஒவ்வொருவரும் இந்த மசோதாக்களை வேஷத்துக்காகிலும் ஆதரிக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். காங்கிரசின் நல்லகாலமோ, கெட்டகாலமோ, தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் இது சமயம் தென் இந்திய காங்கிரசிற்கு பிரதான புருஷ பதவியை சம்பாதித்துவிட்டார். அதுமாத்திரமல்ல தேர்தலுக்கு அபேக்ஷகர்களை நிறுத்தி தேர்தல் பிரசாரம் செய்து தேர்தலையே நடத்தவேண்டிய தலைவர் பதவியையும் பெற்று விட்டார். ஒருவண்டியின் முன்பின் பாரங்கள் எதற்காவது ஆட்களோ, சாமான்களோ கிடைக்கா விட்டால் சில சமயங்களில் கல்லுகளை எடுத்துவைத்து பாரத்தை சரிப்படுத்திக்கொள்ளுவது வழக்கம். அதுபோல் எந்தக் கமிட்டியிலும் பார்ப்பனரல்லாதார் ஒருவர் இருவரை அதில் போடவேண்டுமே என்கின்ற அவசியத்துக்காகத்தக்க ஆட்கள் இல்லாததால் தோழர் முத்துரங்க முதலியார் அவர்கள் போன்றவர்கள் ஒருவர் இருவர் தேர்தல் நியமன அதிகாரக் கமிட்டியில் போடப்பட்டிருந்தாலும் தோழர் சத்தியமூர்த்தியவர்களே பிரதான புருஷரும் தகுதியுடையவரும் சர்வாதிகாரியும் ஆகிய பதவியில் இடம் பெற்று இருக்கிறார். அப்படிப்பட்டவர் தானாகவே ஒரு தொகுதிக்கு-அதுவும் தஞ்சை, திருச்சி ஆகிய வருணாச்சிரம தொகுதிக்கு நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதில் அவர் என்னதான் தந்திரமும் புரட்டும் பொருப்பற்ற அறிக்கையும்விடக் கூடிய யோக்கியதையும் சுதந்திரமும் உடையவராய் இருந்தாலும், இப்போது வெளிப்படையாய் இரண்டில் ஒன்றுசொல்லித் தீரவேண்டிஇருக்கிறது. அவர்சொந்த ஹோதாவில் அவருக்கு ஏதாவது ஒரு கொள்கை உண்டென்று சொல்ல நமக்கு தைரியம் வரவில்லை. ஆனாலும் பார்ப்பனத்தன்மைக்கும், அதன் உயர்வுக்கும், ஆதிக்கத்துக்கும் சிறிதாவது கெடுதிவர அவர் ஒருநாளும் சம்மதிக்க மாட்டார். எப்போதும் சம்மதித்ததுமில்லை அவரைவிடமேலான யோக்கியதையும், அந்தஸ்த்தும் உடையவர்கள் பார்ப்பனல்லாதாரில் எத்தனையோபேர் இருக்கிறார்கள், என்றாலும் அவர்களில் பெரும்பாலோர் தங்கள்சுயநலத்துக்காக வகுப்பு நலனை மிகக் குறைந்த விலைக்கு விற்கக்கூடியவர்கள் என்று சொல்லலாம் என்பது நமது கருத்து. ஆனால் நமது சத்தியமூர்த்தி சாஸ்திரிகளோ, எந்தக்காலத்திலாவது எவ்வளவு நெருக்கடியான சொந்த அசௌகரியத்திலாவது பார்ப்பனீயத்தையோ, பார்ப்பன ஆதிக்கத்தையோ ஒரு கடுகளவு கூட விட்டுக்கொடுத்தார் என்று சொல்ல முடியாது. இந்த வழக்கமும், யோக்கியதையும் தோழர் சத்தியமூர்த்தி சாஸ்திரி இடம்மாத்திரம் அல்ல 100-க்கு $99\frac{1}{16}$ பார்ப்பனர்களிடத்திலும் காணலாம். இதுவேதான் இந்நாட்டில் பார்ப்பனீயம் நிலைத்திருப்பதற்குக் காரணம் என்பதோடு இந்தக் குணம் பார்ப்பனரல்லாதாரிடம் இல்லாததாலேயே அவர்களது முயற்சிகள் அடிக்கடி கவிழ்க்கப்பட்டு விடுவதற்கும் காரணம் என்று சொல்லலாம்.

ஆகவே தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் ஏதாவது ஒன்றைச் சொல்லி யாராவது ஒருவரை அதாவது காங்கிரஸ் பார்ப்பனரல்லாதாரையோ அல்லது வருணாச்சிரமிகளையோ ஏமாற்றியே ஆகவேண்டும். எப்படி இருந்தாலும் என்ன சொன்னாலும் அது வர்ணாச்சிரமப் பார்ப்பனர்

களை ஏமாற்றினதாய் முடிவு பெறுது பார்ப்பனரல்லாதாரைத் தான் ஏமாற்றப்போகிறார் என்பது உறுதி. சமீபத்தில் தஞ்சை ஜில்லாவில் சில பார்ப்பனர்கள் மேற்கண்ட மசோதாக்கள் விஷயமாய்த்தோழர் சத்தியமூர்த்தியின் அபிப்பிராயம் என்ன என்று அவரைக் கேட்டபோது "தீண்டாமை ஒழியவேண்டியதுதான், ஆனால் அதற்கு சட்டம் செய்வது என்பது கூடாத காரியம்" என்று சொன்னாராம்.

தீண்டாமை ஒழிப்புக்கு சட்டம் செய்வதே கூடாதகாரியம் என்றுசொன்ன இவர், தீண்டாதாருக்கு கோவில் பிரவேசம் ஏற்படச் சட்டம் செய்வதை எப்படி ஆதரிப்பார் என்பதை வாசகர்கள்தான் முடிவு செய்துகொள்ள வேண்டும். அது எப்படியோ போகட்டும் இப்போது நம்முடைய கேள்வி எல்லாம் தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் காங்கிரசுக்காரர் என்று தன்னை சொல்லிக்கொண்டு "தீண்டாமை விலக்குக்கு சட்டம் செய்வது கூடாது" என்று சொல்லலாமா? என்பதேயாகும். அது மாத்திரமல்ல, தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்று இந்திய சட்டசபைக்குப்போனால் தீண்டாமை விலக்கு மசோதாவை எதிர்ப்பாரா? ஆதரிப்பாரா? என்றும் கேட்கின்றோம்.

காங்கிரசைப்பற்றி ஏதாவது குற்றம் சொல்லவோ குறை கூறவோ யாராவது ஆரம்பித்தால் அவர்களைப்பற்றி தாறுமாறாகப் பேசவும் எழுதவும் நமது நாட்டில் அனேகதேச பக்தர்கள் இருக்கிறார்களே யொழிய—தேசியப்பத்திரிகைகள் இருக்கின்றனவேஒழிய காங்கிரசின் இப்படிப்பட்ட யோக்கியதைகளை கவனித்து தக்கது செய்வதுஎன்பதைக் கவனிக்க எவருமேயில்லை. நமது நாட்டின் வேலையிலலாத்திண்டாட்டமும் சோம்பேறி வாழ்க்கைப்பிரியமும் சேர்ந்து இப்படிப்பட்ட தேசபக்தர்களையும் தேசியப் பத்திரிகைகளையும் ஏராளமாக உற்பத்தி செய்து விட்டது என்று சொல்லவேண்டுமே யொழிய தேசபக்தர்கள் மீது குறைகூறவும் நமக்கு மனம் வரவில்லை.

இந்திய சட்டசபைத் தேர்தல்களைப்பற்றி காங்கிரஸ் எடுத்துக்கொண்ட கவலைக்கும் இந்திய சட்டசபைக்கு நமது மாகாண காங்கிரசுக்காரர்கள் போகவேண்டுமென்று ஆத்திரப் படுவதற்கும் உள்ள உண்மையான இரகசியம் இதிலிருந்து சுலபமாக விளங்கக்கூடும் என்று கருதுகின்றோம்.

ஆகையால் பார்ப்பனரல்லாத மக்கள் இந்திய சட்டசபைத் தேர்தல்களை இத்தனை நாள் அலக்ஷியமாய் விட்டிருந்தது போல் இல்லாமல் தக்கபடி கவலை செலுத்தி சமூக சமத்துவத்திற்கு பிறவி எதிரிகளான பார்ப்பனர்கள் அப்படிப்பட்ட ஸ்தானங்களுக்குப் போய் நமக்குத் தொல்லை விளைவிக்காமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இவ்வளவு தூரம் எழுதுகிறோம். குறிப்பாக தஞ்சை, திருச்சி ஜில்லாக்களின் தொகுதிக்கு எப்படியாவது ஒரு பார்ப்பனரல்லாதார் நின்று வெற்றிபெறும் படியாக செய்து விட்டோமேயானால் தென்னிந்திய சமுதாயத்துறையில் ஒருபெரிய புதிய சகாப்தத்தை உண்டு பண்ணியவர்களாக ஆகிவிடுவோமென்பதோடு அந்தப்படி இல்லாமல் தோழர் சத்தியமூர்த்தி போன்றவர்கள் இந்திய சட்டசபைக்கு போக நேர்ந்தால் பார்ப்பனரல்லாதார் நலனுக்கு பெரிய முட்டுக்கட்டை போட்டது போலாகுமென்பதையும் தெரிவித்துக்கொண்டு இதை முடிக்கின்றோம்.

புரட்சி ஆசிரியர் மீது வழக்கு.

புரட்சியில் பிரசுரமான ஒரு வியாசத்திற்காக அதன் ஆசிரியர் மீது மன்னார்குடியில் தொடரப்பட்டிருந்த ஒரு மானநஷ்ட வழக்கில் எதிரிக்கு அரஸ்ட் வாரண்டு அனுப்பட்டதற்குக் காரணம் முதலில் சம்மன் அனுப்பப்பட்டதாகவும், அதன்படி ஆஜராகாததினால் வாரண்டு அனுப்பப்பட்டதாகவும் மன்னார்குடி கோர்ட்டில் விபரம் தெரிய வந்ததாம்.

ஆசிரியருக்கு அந்தப்படி எவ்வித சம்மனும் வரவில்லை. ஆசிரியர் ஈரோட்டிலேயே இருந்திருக்கிறார்.

ஆதலால் சம்மன் எப்போது? யார் மூலமாய் அனுப்பப்பட்டதென்றும் அது என்ன காரணத்தினால் சார்வு செய்யப்படவில்லை. என்றும் சம்மன் மீது என்ன எழுதி திருப்பி அனுப்பப்பட்டதென்றும் சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகள் விசாரித்து நீதிசெலுத்த தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களா?

வழக்கு குறிப்பிட்டபடி 4-ந் தேதி தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் மன்னார்குடிக்குச் சென்றிருந்தார். விசாரணை 12-ந் தேதிக்கு வாய்தா போடப்பட்டு விட்டது.

தோழர். சர். ஆர். கே. எஸ்.

இந்திய சட்டசபைத் தலைவர் சர். ஆர். கே. ஷண்முகம் அவர்கள் தென் இந்திய வர்த்தகர்கள் தொகுதியின் சார்பாகஇந்தியசட்டசபைக்கு அபேக்ஷகராய் நிற்பதாக முடிவு செய்துவிட்டார்.

ராவ்சாஹிப்.

கோவை பிரபல வியாபாரியும், பொதுஜனஊழியருமான தோழர் S. N. பென்னையா அவர்களுக்கு அரசாங்கத்தார் அரசர் பிறந்த தினப் பட்டமாக ராவ்சாஹிப் என்னும் பட்டத்தை வழங்கி இருக்கிறார்கள். இது கோவை ஜில்லா வாசிகள் பெரும்பான்மையோருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய விஷயமாகும்.

கோவை சேலம் வட-ஆற்காடு ஜில்லாத்தொகுதி.

இந்திய சட்டசபைக்கு கோவை, சேலம், வடஆற்காடு ஆகிய ஜில்லாக்கள் தொகுதிக்கு "தமிழ்நாடு" ஆசிரியர் தோழர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் ஒரு அபேக்ஷகராய் நிற்க உத்தேசித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

சனாதனிகள் கூட்டம்.

சனாதன தர்மத்தை காப்பாற்றுவதற்காகவும் சாரதா சட்டம் தீண்டாமை விலக்கு மசோதா கோவில் பிரவேச மசோதா ஆகியவைகளை ஒழிப்பதற்காகவும் இந்திய சட்ட சபையின் புதுத் தேர்தலுக்கு சனாதனதர்மச்சபை சார்பாக ஒரு அபேக்ஷகரை நிறுத்த ஜூன் மாதம் 9-10 தேதிகளில் பூரி சங்கராச்சாரியார் தலைமையில் திருவானைக்காவலில் சனாதனதர்ம மகாநாடு ஒன்று கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கிணற்றில் இறங்கியதற்கு அடி.

பரோடாசமஸ்தானத்தில்தீண்டாமை விலக்கு வேலை செய்யச் சென்ற ஒருவர் கிணற்றில் இறங்கி தண்ணீர் சாப்பிட்டதற்காக நன்றாய் அடித்து விட்டார்கள்.

திண்டிவனம்.

பகுத்தறிவு சங்க திறப்புவிழா,

3-6-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 1—30 மணிக்கு திண்டிவனம் வேதவல்லி அம்மாள் சத்திரத்தில் திண்டிவனம் தாலூக்கா பகுத்தறிவு சங்கம் திறவப் பெற்றது.

அவ்வமயம் பல ஊர்களிலிருந்தும் பிரபலஸ்தர்கள் வந்திருந்தார்கள். ஷை கூட்டத்திற்கு சென்னை தோழர். குஞ்சிதம், பி. ஏ. எல். டி. அவர்கள் தலைமை வகித்து பகுத்தறிவு இயக்கத்தின் கொள்கைகளைப் பற்றி விளக்கிப் பேசினார்கள். அதன் பின்னர் தோழர் எஸ். குருசாமி, பி. ஏ. அவர்கள இச்சங்கத்தின் நோக்கங்களைப் பற்றியும், நம் சமூகத்திலுள்ள மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்கும் வகைகளைப் பற்றியும் நீண்ட நேரம் சொற்பொழிவாற்றி ஷை சங்கத்தை ஆரம்பித்து வைத்தார். பின்னர் சங்கத்திற்கு நிர்வாக சபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தபின் கூட்டம் கலைந்தது.

ஷை தேதி, மாலை 4 மணிக்கு ஷை சங்கத்தினாதரவில் திண்டிவனம் திரௌபதையம்மன் கோவிலுக்கு முன்பாக ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அதற்கு தோழர் கே. எம். பாலசுப்ரமணியம் அவர்கள் பி. ஏ. பி. எல். தலைமைவகித்தார். தலைவர் முன்னுரையாக பகுத்தறிவு இயக்கத்தின் சரித்திரத்தை பற்றியும் அதற்கும் மதத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தங்களைப் பற்றியும் பேசினார்.

பின்னர் தோழர் எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல். டி. அவர்கள் நீண்ட நேரம் பெண்களின் நிலைமையைப் பற்றியும், பகுத்தறிவின் அவசியத்தைப் பற்றியும் வெகு ருசிகரமாகப் பேசி முடித்தார். கடைசியாக தோழர் எஸ். குருசாமி பி. ஏ. அவர்கள் பார்பனப் புரட்டு புரோகிதப் புரட்டு முதலிய மூடப்பழக்க வழக்கங்களைக் கண்டித்து பேசி முடித்தார். தலைவர் முடிவுரையோடு தயானந்தபாரதியார் வந்தனோபசாரங்கூற கூட்டம் இனிது முடிந்தது.

குறிப்பு:—ஆலக்கிராமம் தோழர் ஏ. வி. தாதாசாமி அவர்களின் பெரு முயற்சியும் இடைவிடா ஊக்கமும் திண்டிவனத்தில் பகுத்தறிவு இயக்கம் வேரூன்றக் காரணமாயிருந்தது. குறிப்பிடத்தக்கது. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

(9ம் பக்கத் தொடர்ச்சி)

தன்நலம் தேடுகிறவர்கள் என்றும் கருதும்படியாக நமது நாட்டுப் பார்ப்பனர்கள் பலரால் விஷமப் பிரசாரம் செய்பட்டுவந்தது. பலகாரணங்களால்சிலர்உழைத்து வந்ததின் பயனாக நம்மவர்களில் சிலர்-சிறப்பாகவும், குறிப்பாகவும் தோழர்கள் ஆர். கே. ஷண்முகம் ஏ. இராமசாமி ஆகியவர்கள்இந்திய சட்டசபைக்கு போக நேர்ந்ததில் அவர்களுக்கும் மற்றும் தென்னிந்திய பார்ப்பனரல்லாத சமூகத்துக்கும் எவ்வளவு அந்தஸ்தும், பெருமையும் ஏற்பட்டது. என்று யோசித்துப் பாருங்கள். தோற்றுப் போனவர்கள் கூப்பாடு போடுவதைப் பற்றியும், அப்படிப்பட்டவர்கள் அழுவதைப்பற்றியும் நாம் லக்ஷியம் செய்ய வேண்டியதில்லை. அதுபோலவே இன்னமும் சிலர் இந்திய சட்டசபைக்கு நம்மவர்கள் போக நேர்ந்தால் தேசத்துரோகிகள் யார்? தேசீய வியாபாரத்தில் வயிறுவளர்ப்பவர்கள் யார் என்பதை உலகம் அறியச் செய்து விடலாம். தோழர் ஷண்முகத்தைப் போலவே எல்லாத் தொகுதிக்கும் ஆள் கிடைக்குமா என்று கேட்பீர்கள். அதைப்பற்றி எனக்கு லக்ஷியமில்லை. நமது நன்மைக்கும்முன்னேற்றத்துக்கும் பிறவி எதிரிகளாய் இருப்பவர்களைநமது பிரதிநிதிகளாய் தெரிந்தெடுத்து வருகிறோம் என்கின்றஇழிவும், முட்டாள் தனமுமாவது நமக்கு இல்லாமல் போகுமல்லவா? அதோடு மாத்திரமல்லாமல் நமது எதிரிகள் இந்திய சட்டசபைக்குப்போய் நமக்குக் கெடுதி செய்யும் காரியமாவது நிறுத்தப்பட்டதாக ஆகுமா? இல்லையா? தீண்டாமை விலக்குக்கு விரோதமாக இன்று இந்திய சட்டசபையில் இருப்பவர்கள் யார் என்றுயோசித்துப்பாருங்கள். பார்ப்பனரல்லாத கட்சிக்கு நாங்கள் தான் தூண்கள் என்று பெருமை பேசி பயன் பெற்று வரும தஞ்சை-திருச்சி ஜில்லா தொகுதியில் வெற்றி பெற்றுச்சென்ற பச்சை வர்ணாச்சிரம வாதியா? அல்லவா? என்று கேட்கின்றேன். இப்படிப்பட்ட நிலையில் இனியும் நமக்கு அப்படிப்பட்ட இழிவும், சங்கடமும் வந்து சேராமல் இருப்பதற்கு நாம் அந்த தேர்தலில் தகுந்த கவனம் செலுத்த வேண்டும். அத்தொகுதிக்கு கட்சியின் பேரால் பணம் வசூலித்துக்கொடுத்தாவது தக்க அபேக்ஷகர்களை நாம்தேர்ந்தெடுக்கச்செய்யவேண்டும். இவ்விஷயத்தில் முன்போல் இனி அலக்ஷியமாய் இருக்கக் கூடாது என்பதை வலியுறுத்திக் கூற ஆசைப் படுகின்றேன்.

பார்பனர் சேர்க்கை

அடுத்தபடியாக இக்கூட்டத்தில் பேசவேண்டியது பார்ப்பனர்களை தென் இந்திய நலஉரிமைச் சங்கத்தில் சேர்த்துகொள்ளலாமா என்னும் பிரச்சினையாகும். இதுவே இக்கூட்டத்திற்கு முக்கிய பிரசினையாக கருதப்படுகின்றது என்று நினைக்கிறேன். இவ்விஷயம் நமது கட்சியில் சுமார் 8, 10 வருஷங்களாக பேசப்பட்டும் விவாதிக்கப்பட்டும் வருவது யாவரும் அறிந்ததே, ஆனால் என்னைப்பொருத்தவரை இந்த 7, 8 வருஷகாலமாகவே நான் இதை ஆக்ஷேபித்து வந்திருக்கிறேன். எந்தமுறையில் என்றால் பொதுவாழ்வில் பார்ப்பனர்களுடன் கலந்து உழைத்துப்பார்த்து அனுபோகம் பெற்று வந்தவன் என்கின்ற முறையில் ஆக்ஷேபித்து வந்திருக்கிறேன். என்ன என்ன காரணங்களைக்கொண்டுஎன்னஎன்னஆதாரங்களைக்கூறி ஆக்ஷேபித்து வந்தேனோ அவற்றில் ஒரு சிறிதும் இன்று மாற்றமடையவில்லை. அப்போதைய அபிப்பராயங்களை மாற்றிக்கொள்ளஇப்போதுபார்ப்பனர்களிடமிருந்து ஒரு மாறுதல்களையும் நான் காணமுடியவில்லை. ஆதலால் அந்த அபிப்பராயம் இன்னமும் எனக்கு பலமாகவே இருக்கிறது. ஆனால் ஒரு மாறுதல் மாத்திரம் ஏற்பட்டுவிட்டதை நான் என் சொந்த ஹோதாவில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அது என் தோழர்களையோ, எனது கூட்டுவேலைக்காரர்களையோ யாரையும் கட்டுப்படுத்தாது என்றும்சொல்லுகிறேன். அஃதென்னவென்றால் தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் முன்னணியில் இருந்து அக் கட்சிக்காக வேலை செய்யும் சௌகரியம் இப்போது எனக்குஇல்லை. கட்சிக்காக அல்லது கட்சியின் பேரால் கவலை கொண்டு இன்று முன்னணியில் இருந்து வேலைசெய்யும் தலைவர்கள் அல்லது பிரமுகர்கள் கட்சி நன்மையை உத்தேசித்து என்று சொல்லி ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குவார்களானால் நான் போய் குறுக்கிட்டு அதை ஆக்ஷேபித்துக் கொண்டிருக்க வேண்டாம் என்கின்ற நிலையில் இருக்கிறேன். ஏனெனில் ஒவ்வொரு தடவையும் என்னாலேயே ஆக்ஷேபிக்கப்பட்டு அவ்வெண்ணம் நிறைவேற்றப்படமுடியாமல் போய் விட்டது என்று சொல்லப்பட்டுவந்தது ஆனால் ஒரு அளவுக்கு அதன் பலாபலன்களுக்கு நானும் பொறுப்பாளியாகவும் அனுபவிக்கிறவனாகவும் இருந்தேன் எனக் கருதினேன். இப்போதைய எனது நிலைமை அப்பயனுக்கும் அனுபவத்திற்கும் முழு பொருப்பாளியாக இருக்கமுடியாததாய் இருப்பதால் பொறுப்பாளியாய் இருக்கிறவர்களுக்கு முட்டுக்கட்டையாய் இருக்க வேண்டாம் என்று எனக்கு தோன்றிவிட்டது. இது தவறுதலாய் இருக்கலாம். ஆனபோதிலும் இதன் அனுபவமானது பின்னால் நமக்கு ஒரு பெரிய நன்மையையும், படிப்பினையையும் உண்டாக்கினாலும் உண்டாக்கலாம். சமூக விஷயங்களை விட அரசியல் காரியங்களையே பெரியதாகக் கருதி இந்தபார்ப்பனர்களை சேர்க்க வேண்டுமென்ற யோசனைகள் செய்யப்படுவதாகத் தெரிகின்றது. எப்படியானாலும் நான் அதை ஆக்ஷேபிக்க வரவில்லை என்று மாத்திரமே சொல்லுகின்றேன் என்றுபேசினார். பிறகு

தோழர்
ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன்

அவர்கள் எழுந்து தோழர் ராமசாமி இந்த முடிவுக்கு வந்தது தனக்கு அதிசயமாய் தோன்றிற்று என்று சொல்லி பிறகு தானும் அதே அபிப்பிராயத்துக்கு வந்ததாகவும் அதற்கு இன்ன இன்ன காரணங்கள் என்றும் விவரிக்கும்போது அரசியல் சௌகரியத்தையே தான் பெரிதும் கருதி ஆக்ஷேபிப்பதில்லை என்ற முடிவுக்குவருவதாகப்பேசினார்.

பிறகு செட்டி நாட்டு ராஜா சர். அண்ணாமலை அவர்கள் பார்ப்பனர்களை சேர்க்க வேண்டிய அவசியத்தைப்பற்றி பேசி மற்ற விஷயங்களில் முன் பேசியவர்களின் கருத்துக்களை ஆதரிப்பதாகக் கூறினார்.

தோழர் கி. ஆ. பெ. விஸ்வநாதம்

திருச்சி தோழர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள்பார்ப்பனர்களை கண்டிப்பாய் சேர்க்கக்கூடாதென்றும் திருச்சி ஜில்லா பூராவும் அதற்கு விரோதம் என்றும் மகாநாடு திருச்சியில் கூட்டப்பட வேண்டுமென்றும்பேசினார்.

தோழர் பி. பாலசுப்பிரமணிய முதலியார் எழுந்து பொப்பிலி ராஜா அவர்கள் சொன்னவைகளை ஆதரித்து கக்ஷி நன்மைகளைப் பற்றி சில வார்த்தைகள் பேசி ஆதரித்தார்.

தோழர் டி வி. சுப்பிரமணியம் அவர்கள் எழுந்து பார்ப்பனர்களைசேர்க்கக்கூடாதுஎன்றும், தோழர் ஈ. வெ. ரா. அவர்கள் சேர்த்துக்கொள்ளலாமா கூடாதா என்று கண்டிப்பாய் அபிப்பிராயம் தெரிவிக்காமல் வழ வழ என்று பேசியது அப் பிரச்சினையைப் பற்றிய அவரது கருத்தை மற்றவர்கள் அறிய முடியாமல் போய்விட்டது என்றும், தோழர் சௌந்திரபாண்டியன் அவர்களும் அதேபடி நடந்து கொண்டார் என்றும கண்டிப்பாய் பார்ப்பனர்களை சேர்க்கக் கூடாது என்றும் பேசினார். மற்றும் பலர் பேசினார்கள் என்றாலும், சுயமரியாதை இயக்கத்தோழர்கள் தவிர மற்றவர்களில் 100க்கு90 பேருக்குபார்ப்பனர்களைசேர்த்துக் கொள்ளலாம்என்கின்ற எண்ணமே இருந்ததாகக் காணப்பட்டது. சுயமரியாதை இயக்கக்காரர்கள் கட்டுப்பாடாய் ஆக்ஷேபிப்பதானால் அப்பிரச்சினை சுலபத்தில் ஜஸ்டிஸ்கட்சி தலைவர்கள் என்பவர்களுக்கு அனுகூலமாக முடிந்திருக்காது என்பது வாஸ்தவமானாலும் இன்றைய நிலையில் அத்தலைவர்கள் எப்படியாவது அதற்கு தக்க வழி செய்து வெற்றி பெற்று விடுவார்கள். ஆதலால் அதன் லாப நஷ்டத்தை அவர்களுக்கே விட்டுப் பார்க்கலாம் என்கின்ற யோசனையால் தான். தோழர்கள் ராமசாமி, சௌந்திர பாண்டியன் ஆகியவர்கள் தாங்கள்எதிர்ப்பதில்லை என்கின்ற முடிவுக்கு வந்தார்கள் என்று சொல்லலாம்.

அடுத்தநாள்காலையிலும் இதைப்பற்றி ஏதோ ஒரு கூட்டம் நடந்ததாகத் தெரிகிறது. 8ந்தேதி பகல் 3-30மணிக்கு தியாகராய ஞாபகச் சின்ன கட்டிடத்தில் தென்னிந்திய நலவுரிமைச் சங்க நிர்வாக சபைக்கூட்டம் நடந்தது. அதில் மகாநாட்டை சென்னையில் கூட்டுவதாகவும் இந்திய சட்டசபைதேர்தல்களை நடத்த ஒரு கமிட்டிஏற்படுத்தியதாகவும், பார்ப்பனர்களை கட்சியில் சேர்த்துக் கொள்ள இருக்கும் தடைநீக்கப்பட்டதாகவும் ஆகிய தீர்மானங்கள் எவ்விதவிவகாரமுமில்லாமல் நிறைவேற்றப்பட்டன. பார்ப்பனர்களைசேர்த்துக் கொள்ளலாம் என்கின்ற தீர்மானம் தோழர்கள் டாக்டர் நடேசன் அவர்களால் பிரரேபிக்கப்பட்டு தோழர் கி. அ. பெ. விஸ்வநாதம்அவர்களால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

கொரடாச்சேரி

1-6-34-ல் திருத்துரைப் பூண்டியில் நடந்த திருமணத்திற்குச் சென்றுவிட்டு அன்று மாலை 2-30 மணிக்கு கொரடாச்சேரி பொதுக்கூட்டத்திற்கு தோழர்கள் எஸ். இராமனாதன், ராமு, தர்மலிங்கம், ராமையா, காளியப்பன், கே. ஆர். ஜி. பால், குப்புசாமி முதலியவர்கள் சென்றார்கள் அன்றுமாலை 6 மணிக்கு கொரடாச்சேரி பள்ளிக்கூடத்திற்கெதிரில் காங்கிரஸ்காரர்களால் கூட்டப்பட்ட கூட்டத்தில் தோழர் துரைசாமி, தலைமையில் தோழர் எஸ். ராமனாதன், காளியப்பன் முதலியவர்கள் கதர், ஹரிஜன சேவை, சுயராஜ்யக் கட்சியின் சூழ்ச்சிகள் முதலியவற்றை மக்களுக்கு படும்படியாக சுமார் 2-30 மணி நேரம் வரையில் பேசிய பிறகு தோழர் தியாகராஜப்பிள்ளை அவர்களால் வந்தனம் கூறப்பட்டு 9-30 மணிக்குக் கூட்டம் முடிவு பெற்றது. கொரடாச்சேரியில் இது தான் முதன் முதல் சுயமரியாதைப் பொதுக் கூட்டமாகும். கூட்டத்திற்கு 300 பேர்வரை விஜயஞ் செய்திருந்தார்கள் என கே. ஆர். ஜி. பால் எழுதுகிறார்.

தூத்துக் குடியில் சு. ம. திருமணம்.

கோவில்பட்டி தோழர் பால்பிள்ளை குமாரன் சுப்பிரமணியத்துக்கும், தூத்துக்குடி தோழர் கைலாசம்பிள்ளை குமாரத்தி வசந்தாவுக்கும் தோழர் வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் தலைமையில் 7-6-34ந்தேதி சுயமரியாதைத் திருமணம் நடந்தேறியது.

தோழர் நீலாவதி.

திருச்சி தோழர் எஸ். நீலாவதி அவர்கள் தேவகோட்டை லேடி பெண்ட்லண்ட் ஆஸ்பத்திரியில் 2-6-34 சனிக்கிழமை இரவு 10 மணிக்கு பெண் குழந்தை பிரசவித்தார்கள். தாயும், குழந்தையும் சுகம்என நமது நிருபர் அறிவிக்கிறார்.

ஏஜண்டுகள் தேவை.

சென்னைக்கும், காரைக்குடிக்கும் தக்க டிபாஸிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. விபரமறிய விரும்புவோர் ஆபிஸிற்கு எழுதித்தெரிந்துகொள்ளவும்.

மானேஜர்
"புரட்சி" ஈரோடு.

இலங்கை பூசலா ஹிந்து வாலிபர் சமாஜம்.

இந்திய பிரமுகர்கட்கு உபசாரம்.

27-5-34 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12மணிக்கு. ஏற்கனவே அறிவித்திருந்த படி இந்திய சர்க்கார் ஏஜண்ட் தோழர் டி. எல். ஆர். சந்திரன் அவர்கட்கும், திவான்பகதூர் ஐ எக்ஸ். பெரைரா அவர்கட்கும், அகில இலங்கை பெரியகங்காணிமார்களின் சங்கத்தின் தலைவர் தோழர் எஸ். ஷண்முகம் அவர்களின் தலைமையின் கீழ் உபசாரம் நடைபெற்றது. வைபவத்திற்கென அலங்கரிக்கப் பட்டிருந்த பெரும் மண்டபத்தில் சிறந்த வரவேற்பு உபசாரம் வாலிபர் சமாஜத்தினர் களால்நடைபெற்றது.

பகல் 1-45மணிக்கு கண்டியிலிருந்து தோழர் சந்திரன் அவர்கள் அரசாங்க சபை மெம்பர் தோழர் ஜார்ஜ், சி. டி. சில்வா,ராவ்சாகிப் நாராயணசாமி, திவான்பகதூர் ஐ. எக்ஸ் பெரைரா, சுகாதார மந்திரி பனபொக்கா, தொழில் மந்திரி தோழர் பெரிய சுந்தரம், முதலியோர் வந்து சேர்ந்தனர். இலங்கையின் பலபாகங்களினின்று பல பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள். மேள வாத்தியத்துடன் தலைவரை வரவேற்பு மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். இப்பகுதி துரைமார்களில் பிரபல ஸ்தர்கள்பலர் விஜயம் செய்திருந்தார்கள்.

தலைவர் முடிவுரையாக ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

ஹிந்து வாலிப சமாஜத்தலைவர் தோழர்கே ராஜலிங்கம், தோழர்சந்திரன் கனம் பெரைரா இருவருக்கும் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தார்.

பின் தோழர்கள் டி. எல். ஆர். சந்திரன், வை. ஸ்ரீனிவாசய்யர் பி. ஏ. எல். டி., விண்டர்ஸ், தவமணியம்மாள் முதலியவர்கள் பேசினார்கள்.

பின்மந்திரிகௌரவ தோழர் பெரிசுந்தரம், சுகாதார மந்திரி, பனபொக்கா, ஆர். வி. கே. வேலு, சி. எஸ். சிவனடியான்; அரசாங்க சபை மெம்பர் ஜார்ஜ், டி. சில்வா, ('சமத்துவபோதினி' ஆசிரியர்) வி. நயினார் முதலியவர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்த தோழர் எஸ். ஷண்முகம் அவர்களைப்பற்றியும், இக்கலாசாலையையும், சமாஜத்தையும் உண்டாக்க அரும் பாடுபட்டு நிலைநாட்டிய வருமான தோழர் கே. ராஜலிங்கம் அவர்களைப் போற்றியும் குறிப்பிட்டுப்பேசினார்கள்.பின் கூட்டம் கலைந்தது.

"லெனின்" சரித்திரம்.

ருஷ்யப் "புரட்சி" வீரர் லெனின் அவர்களின் வாழ்க்கைச் சரித்திரமும், அவர்செய்த வேலைகளைப்பற்றியும் அடுத்தவாரம் முதல் தொடர்ச்சியாக புரட்சியில் வெளியிடப்படும். (ப-ர்)

பெண் தேவை.

தக்க செல்வமும் திடசரீரமும் உள்ள ஒரு நாட்டுக்கோட்டை கனவானுக்கு ஒரு பெண்தேவை முழு விபரத்துடன் அடியில் கண்டவிலாசத்துக்கு எழுதவும்.

A. B.
C/o E. V. R. ERODE

திருத்துரைப்பூண்டி

சீர்திருத்தமணம்.

இவ்வூர் டிஸ்ட்ரிக்ட் போர்டு மேஸ்த்திரி தோழர் கோவிந்த ராஜலுக்கும், பட்டுக்கோட்டை அங்கமுத்து நாயக்கர் குமாரத்தி செல்லப்பாவிற்கும் தோழர் எஸ். ராமநாதன் அவர்கள் தலைமையில் 1-6-34ந்தேதி வாக்ழ்கை ஒப்பந்தம்செய்யப்பட்டது. அதற்கு வெளியூர்களிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் சுமார் 500 ஜனங்கள் விஜயம், செய்திருந்தார்கள். தலைவர் முகவுரைக்குப் பிறகு தோழர் என். பி. காளியப்பன் அவர்கள் சீர்திருத்த மணத்தின் அவசியத்தைப்பற்றி ஒரு மணி நேரம் பேசினார். தலைவர்முடிவுரையில் சகல விஷயமும் அடங்கிய ஒரு நீண்ட உபந்நியாசம் செய்தார். முடிவாக சு. ம. சங்கக் காரியதரிசி தோழர் உத்திராபதி அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் கலைந்தது. மத்தியானம் சமபந்தி போஜனம் நடந்தது. 2-30 மணிக்கு ரெயிலுக்கு தலைவர் கொரடாச்சேரிக்கு ஒரு பொதுக் கூட்டத்திற்குப் போய்விட்டார்கள். மணத்திற்குப் பிறகு புகைப்படம் எடுக்கப்பட்டது. ஷையூர்களிலிருந்து வந்தவர்களில் முக்கியமாக தோழர் தர்மலிங்கம் முத்துப்பேட்டை, தோழர் ராமு ஈரோடு, தோழர் கோவிந்தராஜலு கொடவாசல், தோழர் கேவிந்தராஜலு, மன்னார்குடி தோழர் வைத்தியநாதன், தோழர் ராஜகோபால், தோழர் சொக்கலிங்கம், பாண்டிதோழர் சௌந்திர்ராஜன், திருவாரூர் தோழர் கெங்காதரன், பட்டுக்கோட்டை முதலியவர்களாகும் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஆம்பூரில் சுயமரியாதைத் திருமணம்.

கடந்த 3-6-34 ல் ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30மணிக்கு ஆம்பூர் கஸ்பாவில் தோழர் ம.ஆதி மூலம் அவர்கட்கும், தோழர் சி.ராஜம்மாள் அவர்களுக்கும் திருமணம் நடந்தேறியது. திருமணத்திற்கு தோழர் இந்திராணி பாலசுப்ரமண்யம் அம்மையார் தலைமை வகித்தார். அவ்வமயம், தமிழன் 'ஆசிரியர், தோழர், ஜி. அப்பாதுரையார் ஜோலார் பேட்டை தோழர் வி. பார்த்தசாரதி, தோழர் எ. பி. பெரியசாமி புலவர், தோழர், டி.என். அகுமந்து, தோழர். எ. ன். ஜான் சுந்திரம், ஆகிய வர்களால் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பட்டது. மணமக்கள் தங்கள் மனசம்மதத்தை வெளியிட்டு மாலை மாற்றிக்கொண்டனர். இத்திருமணத்திற்கு வெளியூர் களிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் ஏராளமான தோழர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

குறித்த நேரத்தில் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டு திருமண ஒப்பந்தம் யாவும் முடிந்தன. பிறகு சொற்பொழிவுகள் முடிந்த பின் மணமக்களுக்கு தோழர். ஜி. டி. ராஜன் அவர்களாலும், தோழர். ஈ. பி. சாமி அவர்களாலும் மணமக்களுக்கு வாழ்த்தல் பத்திரங்கள் படித்துக் கொடுக்கப் பட்டன. பிறகு சன்மானம் முதலியவைகள் முடிந்த பின் இரவு 8. மணிக்குசமபந்திபோஜனம் நடத்தப் பட்டது. அன்றிரவு மண மகன் வீட்டுக்கெதிரில் அமைக்கப்பட்டிருந்த நாடகக்கொட்டகையில் கோலார் தங்கவயல் சாம்பியன் ரீப் சமரச நடிகர் சங்கத்தாரால், கற்பின் சிறப்பு, அல்லது காதலர்களின் வெற்றி என்றும் சமூக சீர்திருத்த நாடகத்தை அதிக விமரிசையாக நடத்திக் காண்பித்தார்கள். மேற்படி நாடகத்திற்கு தோழர். எ. ஐ. பெருமாள் அவர்களின் உழைப்பும் ஆதித்திராவிட அபி விர்த்தி சங்கத்தாரின் உழைப்பும் குறிப்பிட தக்கது என ஒருநிருபர் எழுதுகிறார்.

மணமகன் தேவை

S. S. L. C. படித்து பொறுப்புள்ள உத்தியோகத்தில் ரூ 40, 50 ரூபாய் சம்பளத்தில் இருக்கும் சுமார் 25வயதுடைய பெண்ணுக்கு தக்க மணமகன் தேவை மணமகன் சுயமரியாதை இயக்கத்தில் பற்றுக் கொண்டவராகவும், பொருளாதார நிலையில் தகுந்த யோக்கியதையும் வாலிபமும்கல்வியும் உடையவராகவும் இருக்க வேண்டும். மணமகனைப் பற்றி சகல விபரத்தோடும் எழுதப்பட்ட கடிதங்களே கவனிக்கப்படும்.

O. C.
C/o E. V. Ramasamy,
"PURATCHI" ERODE.

(7ம் பக்கத் தொடர்ச்சி).

ப்போல்உண்ணுகின்றாரா? என்ற
விஷயத்தைக் கவனிப்பதைக் கா
ணேம். மூடமக்களை வெறுஞ்
சொல்லால் மயக்கும் தந்திரத்தை
நமது மகாத்மாவும் கைக்கொண்
டார்! இனி ஹரி ஜனங்களுக்கு
என்ன குறைவு!! எந்தத்தலைவ
னும், "உழைப்பவனுக்கு இரங்கு
கின்றேம், அவனது வாழ்வை
உயர்த்துகின்றேம். அவனுக்கு
த்தான் இனிவரும் சுயராஜ்யம்"
என்கின்றார்களே யொழிய அவ
னுக்கு ஒரு கை சாதம் அதிகமா
கும்படியான மார்க்கமொன்றுகி
லும் காட்டுவதில்லை. தங்கள்சுய
நலத்திற்காக பேசிவரும் இந்த
பேச்செல்லாமே ஒழிய, உழைப்
பவனுக்கு கருத்து ஒன்றுமில்லை.
இதனை நமது "புரட்சி"யில்
தோழர் "சோஷியலிஸ்ட்"
வெகு நேர்த்தியாகக் குறிப்பிட்
டிருக்கின்றார். இதனை ருசுவாக்க
நமது அனுபவத்தில் வந்த ஒரு
விஷயத்தை இங்கு குறிப்பிடுகின்
றேம். தென்னிந்திய ரயில்வே
வேலை நிறுத்தத்தில்சிலதொழிலா
ளர் தலைவர்கள் சிறையில்அடை
க்கப்பட்ட சமயம்வேலையில் உயர்
தரக்கல்வியால் வருமானம் ஒன்
றுமில்லாத சிலர் தொழிலாளர்
சபைகளில் புகுந்து கொண்டு
அதன் மூலமாக அதிகாரிகளைக்
கண்டு, சட்டசபைகளுக்கு அங்
கத்தினர்களாக நியமித்துக்கொ
ண்டார்கள். சிலர் ஜினிவாவுக்கு
அபேட்சகர்களானூர்கள். முத
லாளிகளுக்கு நல்லபிள்ளைகளுமா
னூர்கள். ஆனால், இத்தலைவர்
கள், தொழிலாளர் நெருக்கடியில்
எங்கு போய் ஒழித்துக்கொள்ளு
கிறார்கள் என்பதைச்சற்றுப்பாரு
ங்கள்!

இவ்விதமாகபிளவுகால் எங்கு
மே நிறைந்து கிடக்கின்றது.
தோழர் "சோஷியலிஸ்ட்" சுட்
டிக்காட்டியபடி நமது சுயமரியா
தை இயக்கத்திலும் அனேக
"பிளவு கால்" உண்டு. திருஷ்
டாந்தம் வேண்டுமானல் "மே
தின"க் கொண்டாட்டத்தில் ஒரு
பகுதியார், பம்பாய் தொழிலாள
ருக்கு ஓர் அனுதாபத் தீர்மான
த்தைச் செய்யத் துணிந்தார்
இல்லை! உலகமெங்கும் அங்கும்,
எங்கும், எந்த இயக்கத்திலும்
பிளவு கால்கள் மெத்தவுண்டு.
இந்தப் பிளவு கால்களால்தான்,
உலகக்கேடு நீடித்து வருகின்றது.

சோஷியலிஸ்டென்று அழைக்
கப்பட்டவர்களில் அனேகர் இது
வரை கூறிவந்த பிளவுகாலோர்,
காலா காலங்களாக இருந்து வரு
கின்றனர். காங்கிரஸ் சோஷிய
லிஸ்ட் பார்ட்டி என்ற கட்சியாரு
டைய நடவடிக்கையில் இவர்களு
டைய பிளவுகால் வெளிப்படும்.
முதலாளி சோஷியலிஸ்ட் கூட்
டங்கள், கழுதை, புலித்தோலைப்
போத்திக்கொண்டமாதிரி, பாஸி
ஸ்ட், நாஸிஸ்ட் கட்சிகளாக உல
கில் கடந்த 10 வருஷங்க
ளாக உலாவி வருவதை நாம்
கண்டு வருகின்றேம். இனி
நமது காங்கிரஸ் சோஷியலிஸ்ட்
கூட்டத்தாரின் இரைச்சலைத்தான்
பார்க்கவேண்டும் எந்தக் கால
த்தில் பூர்ஷ்வாக் கூட்டங்கள்சோ
ஷியலிஸ்ட் மைனூரிட்டியாரால்,
தங்கள் தனிவுடமையையும் சொ
த்துரிமையையும் விட்டுக்கொடுத்
தார்கள்? எங்குமில்லை. இனி
பூர்ஷ்வாக் காங்கிரஸை, நமது
சோஷியலிஸ்ட் கட்சிகள் மாற்
றப்போகின்றனா? ஈசாப் கதையில்
(Aeasop's Fables) ஒருகழுதை,
புலித்தோலைப் போர்த்திக்கொண்
டு காட்டில் வாழும் சீவன்களை
மிரட்டப்பார்க்கையில் அங்கிரு
ந்த ஒரு நரி, இதன் கூச்சலைக்
கேட்ட பிறகு இதன் நிலை, ரூபம்
விளங்குமென்றபடி, நமது காங்
கிரஸ் சோஷியலிஸ்ட் கூட்டத்
தாரின் நடவடிக்கையால் அவர்
களின் பிளவுகால்கள் எளிதில்
வெளிப்படும்.

இதுகாறும் தொழிலாளர்பால்
நடித்துவந்த மிஸ்டர் சத்திய
மூர்த்தி காங்கிரசில் சோஷியலி
ஸ்ட் கூட்டமொன்று கிளம்பிய
தும் தனது பிளவுகாலை காட்டி
விட்டார். காங்கிரஸ் கோஷ்டி
யாரில், தற்போதுள்ள முதன்
மையரில் இவரும் ஒருவராத
லால் இவருடைய மனப்பான்மை
யே காங்கிரஸ் மனப்பான்மை
என்று எடுத்துக்கொள்ளலாம்.
காங்கிரஸ், ராஜாங்கத்தாரோடு
ஒத்துழைக்தாலும் அல்லது எதி
ர்த்தாலும் உழைப்பவர்களுக்கு
யாதொரு பயனும் விளையப்போ
வதில்லை. சுதந்திரம் பெற்று
ள்ள அரசுகளில் பிளவுகால்களையு
டையோர்ஒத்துழைத்தாலும் ஒன்
றே அல்லது எதிர்த்தாலும் ஒன்
றே. அது உள்ளங்கையில் நெல்
லிக்கனி போல் தெரிந்துள்ள
விஷயம். ஆனால் காங்கிரசில்
சோஷியலிஸ்ட் கட்சி என்று
சப்தம் கேட்ட மாத்திரத்தில்,
மிஸ்டர் சத்தியமூர்த்தியினுடைய
காதுகள், முறைத்துக்கொண்டது
தான் விசேடம்!

அநுகாமையில் இவருடைய
சோஷியலிஸ்ட் போக்கை அறி
வித்துள்ளார். இப்போக்கு இவ
ருடையபண்டைக்காலஇனத்தார்
போக்கே.எந்தநாட்டில்,எந்தக்கா
லத்தில் இத்தியாதி போக்கைக்
காட்டி உழைப்போரை ஏமாற்று
திருந்தது. எந்த இடத்தி
லும் எக் காலத்திலுமில்லை.
"தொழிலாளருடைய நிலைமை
யைக் கவனிக்கவேண்டியதுதான்.
இவர்களுக்குசாக்காகவும்,நாட்டுப்
புற கைத்தொழிலும் வேண்டிய
தைச் செய்யக்கூடும். சில தனி
ஸ்தாபனங்களை சர்க்கார் ஸ்தாபன
மாக்க வேண்டியதுதான். நிலங்
களை ஒருவாறாக, கிருஷிகளுக்கும்
நிரவவேண்டியதுதான். உடைய
வன், இல்லாதவன் என்ற இன
வேற்றுமையைக் கவனிக்கப்ப
டாது. நமது நாட்டின் வீரத்
தனமும், தரும சிந்தையும் இந்த
இனவேற்றுமைக்கு இடம் கொ
டுக்கா. சிற்சில சீர்திருத்தங்க
ளால் இந்தியநாடு சுகப்பட்டு
விடும்" இதுதான் நமது சத்திய
மூர்த்தியாரின் பல்லவி. இதனை
ஆங்கில சீர்திருத்தக்காரர்களும்,
ஜர்மன்நாஸீஸ்ட்களும், இட்டாலி
பாஸிஸ்ட்களும், அமெரிக்காவில்
பொருளாதார சீர்தருத்தக்காரர்
களும் சொல்லி வருகின்றனர்.
விவகாரத்தில் ஒன்றிலும் உழை
ப்பவன் சுகப்பட்டதாக இல்லை.
எல்லா சீர்திருத்தக்காரர்களும்,
ஆடு நனைகின்றதென்று ஓனாய்
குந்தி அழுவதைப்போல், கண்
ணீர் வடிக்கின்றார்களே யொழிய,
உழைப்பவன் படும் கஷ்டங்களு
க்கு சாஸ்வத பரிகாரத்தைக் கை
யாள்பவரைக்காணேம். நமது
தென்னட்டு சமதர்மிகளாகிலும்
வழிகாட்டுவார்களா? இதனை மிகு
ந்த அவாவுடன் எதிர்பார்க்கின்
றேம்.

கத்தோலிக்கர்களின் பொய்க்கேஸ்.

தூத்துக்குடியைச் சேர்ந்த பழைய
காயலில் 15-4-34ல் அங்குள்ள கத்
தோலிக்கர் கோவிலில் பூஜை நடத்
திய ஜே. எக்ஸ். பூபாலயர் சுவாமியார்
மீது ஸ்ரீமான்கள் சே. சவரியா
பிச்சை பர்னந்து, தம்பையா பர்னு
ந்து, சூசை அந்தோனி பர்னந்து,
திருச்செல்வம் தமேல், பா. மரியவி
யாகுலம், சவரிமுத்து தமேல், பூ.
அந்தோனி சாமி பர்னந்து, ராயப்பன்
பர்னந்து, ஜியார்ஜ் மச்சாது ஆகிய
9 பேர்களும் சேர்ந்து சுவாமியார்
கோவிலிலிருந்து தமது பங்களாவி
ற்குப் போய்க்கொண்டிருக்கும் மார்க்
கத்தில் வழியை மறித்து தாக்க முய
ன்றதாகவும், மேலும் வாய் தூஷணை
யாகப் பேசினூர்களென்றும் குற்றங்
கள் சாட்டி ஏரல் போலீசார் எதிரி
கள் மீது இ. பி கோ. 147, 323,
448-வது பிரிவுகளின்படி ஸ்ரீவைகு
ண்டம் சப் மாஜிஸ்டிரேட் முன்பாக
ஓர் வழக்கு சமீபத்தில் தொடர்ந்தார்
கள். கோர்ட்டார் உபய கக்ஷிக்காரர்க
ளின் சாக்ஷியங்களைப் பரிசீலனை
செய்து பொய்க்கேஸ் என்று எதிரி
களை விடுதலை செய்தார்.

(சு. மி

கத்தோலிக் கோவில் மீது இடி

இருஸ்திரீகள் மாண்டனர்.

கோட்டையம், ஜூன் 1உ

கோட்டயத்திலிருந்து 10 மைல்
தூரத்திலுள்ள ஆயர் குண்ணம் நற்
வெளி கத்தோலிக்க மாதாகோயிலில்
வியாழனன்று காலை 8 மணிக்கு,
அன்று பெரு நாள் கொண்டாட்ட
மாயிருந்த படியால் ஏராள மானவர்
கள் பிரார்த்தனைக்காகக் கோவிலில்
வந்து தொழுது கொண்டிருந்த
போது இடிவிழுந்து 11-ஸ்திரீகளும்,
சர்ச்சின் செல்ஸ்டனும் பலத்த எரி
காய மடைந்தனர். இரு ஸ்திரீகள்
இறந்தனர். கோபுரம் இடிந்தது.
கோயில் தீப் பற்றிக்கொண்டதை
மிகுந்த பிரயாசையின் மீது அணைக்க
வேண்டி வந்தது.

(வட இந்தியாவில் ஏற்பட்ட பூகம்
பத்தால் கோவில்கள் இடிந்து விழா
மல்காப்பற்றி கடவுள் கத்தோலிக்
கோவில் மீது இடி விழச் செய்த
தேனே.

வாலிபர் சங்கம்.
சிவகெங்கை.

24-5-34ந்தேதி வியாழக்கிழமை
மாலை 5மணி சுமாருக்கு இராமநாத
புரம் ஜில்லா சி. ஐ. டி. இலாகா
ஹெட்கான்ஸ்டபில் யாகூப் சாகிபு
அவர்கள் ஷை சங்கக் காரியதரிசி
யான தோழர் கே. மாதவன் அவர்க
ளிடம் வந்து சங்கத்தின் தலைவர்
காரியதரிசி, உபக்காரியதரிசி, மெம்
பர்கள், சங்கத்தின்நோக்கம், சங்க ஸ்
தாபன காலம் ஆகியவைகளைக்கேட்டு
தெரிந்து எழுதிக்கொண்டு சென்றி
ருக்கிறார்.

மலையாளம் சில்க் & புடவைகள்.

2¼வீதி 5 நீளம்பட்டு 1-க்குரூ. 1-6-0	2½வீதி 12நீளம் ரேஸ்சேலை1-க்குரூ. 3
ஷை கம்பிக்கரை டசன்ஷை 14-0-0	ஷை 14நீளம் அறக்குசேலைஷை 3-8-0
ஷை 4½ நீளம் டசன் ஷை 10-0-0	ஷை 7 நீளம் தாவணி ஷை 1-12-0
3 வீதி 8நீளம் வேஷ்ட்டிஷை 3-8-0	எல்லா கலர்களிலும் கிடைக்கும்.

S. K. R. வீவ்விங்பாக்டரி, கோட்டார். திருவாங்கூர்.

திருப்பூர்

செங்குந்த மகாஜன சங்க மகாநாட்டில்

தோழர் ஈ. வெ. ரா.

சொற்பெருக்குச் சுருக்கம்.

சமதர்மம்.

தோழர்களே!

இன்று இக்கூட்டத்தில் "சமதர்மம்" என்னும் பொருள்பற்றிப் பேசும்படியான ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததுபற்றி நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். சமதர்மம் என்பதற்குப் பல வேறு தேசங்களிலும், சமூகங்களிலும் பல வேறு அர்த்தத்தில் வழங்கி வருகிறது. சமதர்மம் என்பது சிற்சில இடங்களில் மதத்துக்கும், சில இடங்களில் கடவுளுக்கும், பிறிதும் சில இடங்களில் பணக்காரனுக்கும், புரோகிதனுக்கும் விரோதம் என்றும் கூறப்படுகிறது. ஆனால்பொதுவாக இன்று சமதர்மம் என்னும்சொல் நாட்டிலுள்ள ஏழை மக்களின் உள்ளத்திலே கிளர்ச்சியையூட்டி ஆவலோடு சமதர்மமொன்றே தங்களின் வாழ்வை இன்பமயமாக்கும் என்கின்ற மனப்பான்மையை உண்டாக்கியிருக்கிறது. ஆகவே இன்று சமதர்மத்தை உச்சரிப்பது மிக சகஜமாகப் போய்விட்டது. சமீபத்தில் ராஞ்சியிலும், பாட்னாவிலும் கூடிய சமதர்ம வாதிகளால் சமதர்மத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. காந்தியாரும் கூட சமதர்மம் ஆக்ஷேபகரமானதல்ல என்கிறார். தோழர் ஜவஹர்லால் தான் சமதர்மவாதி என்றும், மக்கள் சமூக நலனுக்கேற்றது சமதர்மம் ஒன்றே என்றும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார். மனித சமூகத்தில் 100க்கு 90க்கு மேற்பட்ட பாமர மக்கள், தொழிலாளிகள், பாட்டாளிகள் பூராவும் இன்று இக்கொள்கை வளம் பெறும் நாளை எதிர் நோக்கி நாவூர ஏங்கிக்கோரி நிற்கின்றனர் என்பது வெளிப்படையான உண்மை.

சமதர்மம் என்றால் சாதாரணமாக பாரபக்ஷமற்ற நீதி, சமத்துவம், பேதமற்ற அதாவது உயர்வு, தாழ்வு இல்லாத நிலை என்பதாகும். ஆனால் இன்றைய வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திலும் அதாவது ஜாதியில், கல்வியில், செல்வத்தில், வாழ்க்கைஅந்தஸ்து நிலையில் மேல் கீழ் நிலை இருந்து வருகிறது. இவற்றை ஒழித்து யாவற்றிலும் சமத்துவத்தை நிறுவுவதற்கு சமதர்மக் கொள்கை ஆட்சி அவசியம் என்றால் மதக்காரர்களுக்கும், கடவுள் நம்பிக்கை கொண்ட ஆஸ்திகர்களுக்கும் கஷ்டமாயிருக்கிறது. உழைப்பாளி மக்கள் உடல் வருந்தியுழைத்த பின்னும் குடிக்கக்கூழின்றியும்கட்டக்கந்தையின்றியும், குடி இருப்பதற்கு ஓட்டைக் குடிசைகூட இல்லாமல் பரிதவிக்கும் பொழுது எந்தவிதமான வேலையும் செய்யாது, பணக்காரனாக இருக்கின்ற சந்தர்ப்பத்தால் அக்கிரமமாக அநீதியாக தொழிலாளிகளைக்கொடுமைப்படுத்திக்கொண்டு தான் மட்டும் படாடோபமாக, டம்பாச்சாரித்தனமாக வீண் விரயமாக்குவது சரியல்ல. எல்லோரும் கஷ்டப்பட்டு வேலை செய்து பலனை எல்லோரும் சமமாக அநுபவிக்கலாம் என்று சொன்னால் அது முதலாளிகளுக்கும்,பணக்காரர்களுக்கும், ஜமீன்தார், மிட்டாதார் முதலியவர்களுக்கும் விரோதம் என்று வீண் கூக்குரலிடப்படுகிறது. சாதாரணமாக இன்று ஒரு குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஆளுக்கொரு வேலை செய்து சமமாக உண்டு, உடுத்திக் களிப்புடன் வாழ்க்கை நடத்துவதில்லையா? அதுபோலவே ஒருகிராமம், ஒரு ஜில்லா ஒரு மாகாணம், அல்லது தேசத்திலுள்ள சகல மக்களும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போலவும், உள்ள பூமியும் பொருளும் எல்லாம் குடும்ப பொதுச் சொத்து போல் எல்லா மக்களுக்கும் பொதுவாகிய அக்குடும்பத்துக்குச் சொந்தமே அன்றி தனித்தனியாக அவனவன் இஷ்டம்போல் அனுபவிக்கும் தனிஉரிமை யாருக்கும் இல்லை. எல்லோரும் ஒன்றுபட்டு ஆளுக்கொரு வேலை செய்து உண்டு உடுத்தி இன்பவாழ்வு வாழவேண்டுமென்பதுதான் சமதர்மம். மற்றபடி இதில் பயப்படத்தக்க காரியமும், புரியாதகாரியமும் இல்லை.

இந்த சமத்துவமான வாழ்க்கை வேண்டுமென்று கூறும் பொழுது சமதர்ம விரோதிகளான மதவாதிகளும், ஆஸ்திகர்களும் துள்ளிக்குதித்து அது கடவுளுக்காகாது; அவனவன் முன்ஜென்மத்தில் செய்த பாவ, புண்ணியங்களுக்கேற்றாற்போல் சுகமான வாழ்க்கையோ, கஷ்டமான வாழ்க்கையோ நடத்துகிறான். பணக்காரனாகவோ, ஏழையாகவோ இருப்பதுகடவுள் சித்தம். அவர் கடாட்சத்தால் அவனுக்கே தனிவுரிமைகொடுக்கப்பட்ட பொருள்களை பொதுவுடைமை ஆக்கப்படல்அநீதம், கடவுள் கட்டளைக்கு விரோதம் என்று கூப்பாடு போடுகிறார்கள். இன்றைக்கு முனிசிபல் கட்டடத்தையோ, பொது ரஸ்தாவையோ ரயில்வேயையோ எடுத்துக்கொள்ளுங்கள். இதில் யாருக்கு உரிமையில்லையெனக் கூற முடியும். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அவற்றை அநுபவிக்கிறார்களா? இல்லையா? இதனால் எந்தக்கடவுளுக்கு, மதத்துக்கு, அல்லது பணக்காரனுக்கு ஆபத்து வந்துவிட்டதாகக்கூறமுடியுமா? "மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாததான பல வசதிகளையும், சாதனங்களும் வேறொருவரும் அநுபவிக்கக்கூடாது; அந்த சாதனங்களின்றி மற்றவர்கள் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை. எனக்கு தேவைக்கு மேலிருந்தாலும், நான் அநுபவிப்பதற்கு வேண்டிய அளவுக்கு மேலிருந்தாலும் அது சும்மா இருந்து வீணாக அழிந்து போவதானாலும் பிறர் அநுபவிக்க நான் பார்க்கக்கூடாது" என்னும் குறுகிய புத்தியும், கீழான எண்ணமும், சுயநல உணர்ச்சியும் கொண்டவர்களுக்கும் தான் உழைக்கக் கூடாது, உடல் வளையக்கூடாது, ஆனால் பிறமக்கள் உழைப்பதினால் விளையும் பயனைத் தட்டிப் பறித்து அனுபவிக்க வேண்டும் என்னும் சூழ்ச்சி மிக்க சோம்பேறிகளுக்கும்தான் சமதர்மம் கசப்பாகவோ வெறுப்பாகவோ விரோதமாகவோ இருக்குமேவோ தவிர அவர்கள் இதைப்பற்றி மறுப்பார்களே தவிர மற்றபடி உடலைச் சாறாகக் கசக்கிப் பிழிந்து வேலை செய்யும் பாட்டாளி மக்களுக்கு இந்த கொள்கை ஒரு நாளும் விரோதமானதல்ல. பெரிதும் சாதகம் செய்ய வல்ல வாழ்க்கை நிலையை உயர்த்தவல்ல ஜீவதாது இது என்று தான் கூற வேண்டும். உலக ஜனத்தொகையில் 100க்கு 90 பேருக்கு மேற்பட்ட தொழிலாளிகள் பாமர மக்கள் ஆகியவர்களுக்கு அனுகூலமாயிருக்கிறஇந்தத் தத்துவத்தை ஞாய புத்தியும் நேர்மையான நோக்கமும், பரந்த மனப்பான்மையும் கொண்ட அனைவரும் ஆதரித்துத்தான் தீருவார்கள்.

ஏற்றத் தாழ்வுகள் மலிந்த இன்றைய சமூக அமைப்பால் ஏற்பட்டால் யாருக்காவது வாழ்க்கையில் பூரண இன்பமோ, சாந்தியோ, சமாதானமோ உண்டு என்றுகூற முடியுமா? இல்லாதஏழைக்கு கஞ்சியில்லை, கட்டத்துணி இல்லை, இருக்க வீடில்லை, ஓய்வில்லை, பிள்ளைக்குக் கல்வி வசதியில்லை என்பன போன்ற பல ஓயாக் கவலையே கவலையால் சதா வறுமைக் கடலிலே கிடந்துழல்கிறான். பணம் படைத்த பூஸ்திதி படைத்த பணக்காரர்களுக்கோ இருப்பதைக் காக்க வேண்டும், மேலும் பெருக்க வேண்டும், பிறர் கவராது காப்பாற்ற வேண்டும் என்னும் கவலையோடு பேராசை மிகுதியால் மேலும் மேலும் செல்வத்தைப் பெருக்கவே ஆசைப்படுகின்றார்கள். சாதாரணமாக ஒரு தோட்டி வேலை செய்யும் கீழ்தர நிலையில்உள்ளவன் ஆடு, கோழி வளர்த்துக் கொஞ்சம் பணக்காரனாக வேண்டும். பின்னர் கிராம மணியகாரனாக ஆகவேண்டும் என்றெண்ணுகிறான். மணிய வேலை கிடைத்தாலும் தாசில்தாராக வேண்டுமென்று ஆசிக்கிறான். அப்படியானாலும், கலெக்டர் ஆக வேண்டும், கவர்னர் ஆகவேண்டும் வைஸ்ராயாக வேண்டும், ஏக சக்கிராதிபதியாய் உலகாள வேண்டும்; இன்னும் இதற்கு மேல் வேறு உலகங்கள் இருந்தாலும் அவற்றையும் தான் ஒருவனேகட்டிஆள வேண்டும் என்று கருதுகின்றான். இந்த மனப்பான்மைக்குக் காரணம் என்னவென்றால் கஷ்டப்பட்டு உழைக்காது சுகவாழ்வு நடத்துவதும், தேவைக்குமேற்பட்ட சொத்துக்களுக்கு சொந்தக்காரனாக இருப்பதும்ஒருகௌரவம் என்றும், தனி மதிப்புக்குப் பாத்திரமானது என்றும், கண்ணியமானது என்றும் கருதுகின்ற ஒரு "மூட நம்பிக்கையே தவிர வேறில்லை.

இந்த மூடநம்பிக்கையின் பயனாய்த் தான் மனிதன் தேவைக்கு மேற்பட்ட பொருள் போகங்களைத்தாலும் அனுபவியாது, பிறரையும் அநுபவிக்க விடாது, வைக்கோல்போரைக் காக்கும் நாய்

போல் வாழ்கின்றான். இந்தத் தனிவுடமை வாழ்க்கையில் பல ஆயிரக்கணக்கான, கோடிக்கணக்கான, மக்களுக்குப் பயன்படக் கூடிய பல பொருள்கள் சாதனங்கள் வீண் விரையம் செய்யப்படுகின்றன.

உதாரணமாக மோட்டார் காரை எடுத்துக் கொள்வோம். ஒரு செல்வந்தர் குடும்பத்துக்கு தனியாக ஒன்று அல்லது மேற்பட்ட கார்கள் வைத்துக் கொண்டிருப்பது இன்றைய அநுபவம். ஒரு நாளில் சாதாரணமாக ஒரு மனிதனுக்கு 3-அல்லது 4-மணி நேரமே மோட்டார் வேண்டியிருக்கும். இந்த 3-அல்லது 4-மணி நேர தேவைக்காக உபயோகப்படும் மோட்டார் ஒரு நாளில் 20-மணிநேரம் வீணாக யாதொரு பயனுமின்றி இருக்கிறது. இதில் வீணாக பணம் முடங்கிக் கிடக்கிறது. இந்த நிலைமாறி பஞ்சாயத்து போர்டு அல்லது முனிசிபாலிட்டிகளில் ஜனத்தொகைக்குத் தக்கவாறு 10, 15, 20, கார்கள் வைத்துக் கொண்டால், பொதுவில் தேவைப்பட்டவர்கள் தேவைப்பட்ட நேரங்களில் உபயோகித்துக் கொண்டால் வீணாக பணம் முடங்கிக் கிடக்க வேண்டிய தேவையில்லை. இம்மாதிரியான முறைகளை அநுசரிப்பதால் வீண் விரையங்கள் தடுக்கப்பட்டு, மக்கள் எல்லோரும் மனித வாழ்வை இன்பமயமாக்கும் பல சாதனங்களையும் அநுபவித்துப் பயன் படுத்திக் கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்படும். இதற்கு பாடுபடாது பிறருழைப்பில் படாடோப வாழ்க்கை நடத்துவதும், அதிகப்படியான பொருள்களுக்கு அதிபதியாய் இருப்பதும் கண்ணியமான, பெருமையான வாழ்க்கை என்று கருதப்படுகின்ற மூட நம்பிக்கை ஒழிய வேண்டும். இதில் எத்தகைய ஒரு கவுரவமும், மரியாதையும் இல்லை என்பது தெளிவாக்கப்பட வேண்டும்.

சைவத்தில் தீண்டாமை.

தோழர்கள் கண்டனம்.

27-5-34 தேதி ஞாயிற்றுக்கிழமை கோயமுத்தூருக் கடுத்த பேரூரில் நடராஜசுவாமிக்கு 'வைகாசி டாலாபிஷேக மகோற்சவ விழா' நடைபெற்றது. பின்னர் மாலை அவ் விழாவை யொட்டி நடைபெற்ற சைவர்கள் கூட்டத்திற்கு, முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபடி தோழர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வரவில்லை. கூட்டத்துக்கு தோழர் மணிபழகு மாணிக்க சுந்தரஞ் செட்டியார் தலைமை வகித்து முன்னுரையாகச்சிறிதுநேரம் பேசியபின்தோழர் ஆர். கிஷன் அவர்கள் "இன்ப வாழ்வு" என்பது பற்றியும், தோழர் பாரதிநேசன் அவர்கள் "சைவ மதமும் தீண்டாமையும்" என்பது பற்றியும், தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் "தற்காலமும், சைவத்தின் நிலையும்" என்பது பற்றி மிக விரிவாகப்பேசினார்கள். தோழர்கள் மூவரும் பேசும்பொழுது அன்பை அடிப்படையாகக் கொண்டதெனப் போற்றப்படும் சைவ சமயத்தில் பிறப்பில் பேதங்கண்டு ஜாதிக்கொடுமை தீண்டாமைக்கொடுமை முதலியவைகள் அமுலிலிருந்து வருவதைப் பலஅரிய மேற்கோள்களுடன் கண்டித்ததுடனில்லாது, கடவுள் வழிபாட்டின் பேரால் அனாவசியமாக மக்களின் உழைப்பும், பொருளும், நேரமும் வீணாக்கப்படுதலைத் தடுத்து மக்களுக்கு உபயோகப்படும் முறையில் அவற்றைச் செலவளிக்கப் படவேண்டுமென்பதை வழியுறுத்திப் பேசினார். குணம், குறி, உரு, நிறமுமில்லாததெனச் சொல்லப்படும் கடவுளுக்கென்று தேர், திருவிழா, உற்சவம் முதலியன செய்தல் வீண் விரையம் என்பதைத் தெளிவாக விளக்கிப் பேசியதுடனமையாது, எம் மதத்தினரேனும், அன்றி எச் சமூகத்தினரேனும், இயக்கத்தினரேனும் காலத்துக் கிசைந்த மாறுதல் கொள்ள மறுப்பரேல் காலச் சக்கரச் சுழற்சியின் சண்டமாருதச் சூராவழியிலே சின்னாபின்னமாகச் சிதறியடிக்கப்படுவர் என்றும் ஆகவே உலகந்தோறும் இன்று விரவிப்பரவிவரும் சமத்துவ உணர்ச்சியுடன் மனித வர்க்கத்தைக் கௌரவப்படுத்தும் முறையில் தீண்டாமைக் கொடுமையையும், ஜாதிப் பேயையும், மதத் திமிரையும் பிடித்துமனித சமூகமனைத்தையும் மனிதன் என்ற நேரிய முறையில் நேசிக்க வேண்டுமென்றும் பேசினார்கள். கூட்டத்தில் மிகுந்த ஆரவாரம் காணப்பட்டது.

பின்னர் நடராஜப்பதுமை உர்வல வைபவம் செய்ய வேண்டிய காலம் வந்து விட்டமையால் தலைவர் முடிவுரையையும் நீட்டாது கூட்டத்தைக் கலைத்து விட்டதாகக் கூறினார். அத்துடன்கூட்டம் முடிவுபெற்றது. பின்னர் ப. ஜீவானந்தம் முதலிய தோழர்கள் நேரே அன்றைய இரவு பீளமேட்டில் பேச வேண்டியதாக இருந்தபடியால் அங்கு புறப்பட்டுச் சென்றனர்.

பீளமேட்டில்

சமதர்ம முழக்கம்

27-5-34ந் தேதி ஞாயிறன்று இரவு கோயமுத்தூரை யடுத்த பீளமேட்டில் மாரியம்மன் கோவிலின் எதிரில் ஒரு பெரிய பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. அன்று பேரூரில் நடைபெற்ற கூட்டத்திலும் பேசிவிட்டு வந்தமையால் தோழர் ப. ஜீவானந்தம் பீளமேடு வந்து சேர கொஞ்சம் தாமதமாயிற்று எனினும், கூட்டத்துக்குவந்திருந்தவர்கள் அவரது சொற்பொழிவைக் கேட்க வேண்டு மென்னும் அவாவால் அமைதியாகக் கலையாது காத்திருந்தனர். கூட்டம் துவக்குவதற்கே 10 மணியாகி விட்டது. தோழர் ஆர். கிஸன் அவர்கள் சிறிது நேரம் 'சமதர்ம'த்தைப் பற்றிப் பேசிய பின் தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் சமதர்மதத்துவங்களைப் பற்றி மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும், பல பெரிய அறிவாளிகளின் மேற் கோள்களுடன் சுமார் 2 மணி நேரம் பேசினார். மிகவும் அகாலமாகிவிட்டாலுங்கூட கூட்டம் சிறிதும் கலையாது. ஆண், பெண், பள்ளி மாணவர் அனைவரும் மிக அமைதியாயிருந்து மிக வுணர்ச்சியுடன் கேட்டுக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

சுமார் இரவு 12 மணிக்கு தோழர் ஆர். சுந்தரராஜன் அவர்களால் வந்தனங் கூறப்பட்டு கூட்டம் கலைந்தது.

விவாக ஒப்பந்தம்.

3-6-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணிக்குஆப்பூர் எ- முனுவையா குமாரர் தோழர் எம் ஆதிமூலம் அவர்கட்கும் பள்ளிக்கொண்டைத் தோழர் எம் செல்லையா குமாரத்தி தோழர் சி- ராஜம்மாள்அவர்களுக்கும்—தோழர் இந்திராணி பாலசுப்ரமணியம் அவர்கள் தலைமையின் கீழ் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும் அது சமயம் தோழர்கள் ஜி. அப்பாதுரையார் கே. வி. அழகர்சாமி எ. பொன்னம்பலம், வி. பார்த்தசாரதி முதலியோர்சமதர்ம சொற்பொழிவுகள் ஆற்ற அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

நோயாளிகளுக்கோர் எச்சரிக்கை.

நல்லகாலம் வந்துவிட்டது.

இது சமயத்தை இழந்து விடாதீர்கள்.

ஆயிரக்கணக்கான நோய்கள் குணமாகிவிட்டது.

நீரழிவு, பவுந்திரம், வெள்ளை, வெட்டை முதலிய நோயுடையவர்கள் நேரில் வந்து குணப்படுத்திக்கொள்ளுங்கள். பத்து நாட்களில் குணமடைவீர்கள். நீரழிவு, பவுந்திரம் முதலிய நோயுடையவர்களின் விலாசத்தைத் தெரிவிப்பவர்களுக்கு ஒரு ரூபாய் இனாம் அனுப்பப்படும். விபரங்களுக்கு யெழுதித் தெரிந்து கொள்ளுங்கள்.

வேண்டிய சர்டிபிகேட்டுகளை நேரில்தெரிந்துகொள்ளுங்கள்.

அரண்மனை வைத்தியர்

எஸ். டி. மாணிக்கம் பிள்ளை,

சித்தவைத்தியசாலை, வளையல்காரத்தெருவு

ஈரோடு.

ஆலயப்பிரவேச உரிமை.

இது திருவாங்கூர் சமஸ்தானம் நாகர்கோவில் வக்கில் தோழர் பி. சிதம்பரம் பி. ஏ. பி. எல்., எம். எல். ஏ. அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஓர் அரும்பெரும் ஆராய்ச்சி நூலாகும். இதில் ஆலயங்கள் நிறுவப்பட்டதின் இரகசியம், அவைகள் ஆதியில் இருந்துவந்த முறை, ஆலயப்பிரவேச சம்மந்தமாய் ஆதியிலிருந்து இதுவரை அவ்வப்போது ஏற்பட்டு வந்த நிகழ்ச்சிகள் மற்றும் அதுசம்மந்தமான சட்ட முறைகள் முதலிய அனேக விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. சுமார் 300 பக்கத்தில் நல்ல கிளேஸ் காகிதத்தில் டிம்மி 1க்கு 8 சயிசில் உள்ள பெரிய இங்கிலீஷ் புத்தகம்.

இதன் விலை மிகக் குறைந்த ரூ. 1—0—0.

விலாசம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

ஆர். ராமலிங்கம், வியாபாரி, கேப்ரோட், கோட்டாறு, திருவாங்கூர்.

ஆகிய இடங்களில் கிடைக்கும்.

(4ம் பக்கத் தொடர்ச்சி).

டவேண்டுமாம். ஆகவே சனாதன தர்மங்கள் என்பவைகள் பார்ப்பனரல்லாத மக்களுக்கு பார்ப்பனர் ஒழிந்த மற்ற மனித சமூகத்திற்கு எவ்வளவு மோசமானதும் கெடுதியானதும் சுயமரியாதைக்கு விரோதமானதுமான காரியம் என்பதை நான் உங்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

இதிலிருந்து பார்ப்பனப் புரட்டுகளை நீங்கள் தெரிந்து கொள்ளக் கூடும் என்று நினைக்கிறேன். சில பார்ப்பனர்கள் தீண்டாமை ஒழிய வேண்டும்என்பதும்,சில பார்ப்பனர்கள் கோயில் பிரவேசம் எல்லோருக்கும் இருக்கவேண்டும் என்பதும், மற்றப்பார்ப்பன குருமார்கள், மடாதிபதிகள், ஜாதித் தலைவர்கள் ஆகிய எல்லோரும் சேர்ந்து சட்டம் ஒழியவும், பிரயத்தனப்படுபவர்கள் ஒழியவும் யாகம் செய்வதும், யாகத்தை ஆதரிப்பதுமாயிருந்தால் இதற்கு என்ன அர்த்தம் சொல்வது என்று உங்களையே கேட்கின்றேன். நான் இங்கு வரப்போவதாய்ப்பத்திரிகையில் தெரிந்தவுடன், இரண்டொரு பார்ப்பன நண்பர்கள்என்னைப்பரிகாசம்செய்தார்கள். அதுஎன்னவென்றால் "நீங்கள் இப்பொழுது உலக மக்கள் பொது விஷயங்களில் சம்மந்தம் வைத்துக்கொண்டிருக்கும் போது எங்கோ இரண்டொரு பார்ப்பனர்கள் வயிற்றுப் பிழைப்பிற்காக ஏதோ ஒரு வியாபாரமாய் யாகம் செய்து பிழைக்கிற காரியத்தைப் பிரமாதமாய்க்கருதி அதற்காக நீங்கள் போகலாமா?" என்று கேட்டார்கள். இந்தயாகங்களை யாரோ இரண்டொருபார்ப்பனர்களின் வயிற்றுப்பிழைப்புவியாபாரம்என்றுஎண்ணிவிட முடியுமா? இதற்கு எல்லாப்பார்ப்பனரும் பணம் கொடுத்திருக்கிறார்கள். சங்கராச்சாரி முதலியவர்கள் ஆதரவளிக்கிறார்கள். அய்யங்கார் பார்ப்பனர்களுக்கு யாகம் விரோதமானது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்போதைய யாகத்தில் அய்யங்கார் பார்ப்பனர்களும்சிலமாத்வப் பார்ப்பனர்களும் கூட சேர்ந்தும் ஆதரவளித்தும் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அப்படி இருக்க இரண்டொரு பார்ப்பனர் என்று எப்படி சொல்லிவிட முடியும்?

அப்படியானால் இவ்வளவு கூச்சல் ஏற்பட்ட பிறகாவது சில முக்கியமான பார்ப்பனர்கள் ஏன் ஒன்று கூடி ஒரு அறிக்கையை வெளிப்படுத்தக்கூடாது. "இந்த யாகம் பார்ப்பன சமூகத்தின் சார்பாகவோ மதத்தின் தத்துவப் பிரகாரமோ நடப்பதல்ல, நாங்கள் அதை ஆதரிப்பதில்லை என்பதோடு வெறுக்கவும் செய்கிறோம் என்று தோழர்கள் மகா கனம் சாஸ்திரியாரும், சர் சிவசாமி அய்யரும், சர். சி. பி. ராமசாமி அய்யரும், டி. ஆர். வெங்கிட்டராமசாஸ்திரியாரும், சர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும் ஒரு அறிக்கைவெளியிடட்டுமே? இவர்களெல்லாம் தங்களைப் பெரியசீர்திருத்தவாதிகள் என்றும், தாங்களே இந்திய மக்களின்பிரதிநிதிகள்என்றும்எல்லா விஷயங்களுக்கும் தாங்களே அபிப்பிராயம் கொடுப்பவர்கள் என்றும், தாராளமாக விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்ததுடன் போதிய விளம்பரமும் பெற்றிருக்கிறார்கள். ஏன்? இவர்கள் வாய் திறக்கக்கூடாது என்று கேட்கிறேன். காங்கிரஸ் பார்ப்பனர்களாவது ஏன் அறிக்கை வெளியிடக்கூடாது. தோழர் சத்திய மூர்த்திசாஸ்திரியார் முந்திரிக்கொட்டை போல் உலக விஷயங்களுக்கெல்லாம் முன்னால் வந்து அபிப்பிராயம் கொடுப்பவர் இதற்கு ஏன் வாய் மூடிக்கொண்டிருக்கிறார்கள் என்று கேட்கிறேன்.

தீண்டாமைவிலக்கு மசோதாவையும், கோவில் பிரவேச மசோதாவையும்காங்கிரசின்சார்புடைத்ததல்லவா என்றும், தோழர்காந்தியார்இம்மசோதாக்கள்நிறைவேறவேண்டிகவலை எடுத்துக்கொண்டு இந்திய சட்டசபை அங்கத்தினர்களிடம் பிரசாரம் செய்து ஆதரவுதேடி வருகிறார்களா இல்லையா என்றும்கேட்கின்றேன். இப்படிப்பட்ட காங்கிரஸ் அனுமதிபெற்ற காங்கிரஸ் சார்பான மசோதாக்களை ஒழிப்பதற்கு யாகம் செய்தால், காங்கிரஸ் வாதியான தோழர் சத்தியமூர்த்தியின் கடமை என்ன என்று கேட்கின்றோம்?

தோழர் சத்தியமூர்த்தி இந்திய சட்டசபைத் தேர்தலுக்கு தஞ்சை திருச்சி ஜில்லா சார்பாக நிற்கப்போவதாய் பிரஸ்தாபம். தஞ்சை ஜில்லா பார்ப்பனர்கள் வருணாச்சிரமக்காரர்கள். அவர்கள் தீண்டாமை விலக்கு மசோதாவுக்கும் கோவில் பிரவேச மசோதாவுக்கும் எதிராகவும் சாரதா சட்டத்தை ஒழிப்பதற்கும் தகுதி உடையவர்களையும் அந்தப்படி செய்வதாக வாக்களிப்பவர்களையுந்தான் தேர்ந்தெடுப்பவர்கள். அப்படிஇருக்க தோழர் சத்தியமூர்த்தி சாஸ்திரிகள் அந்தத் தொகுதியில் நிற்பதென்றால் அவர் எப்படிப்பட்டவராய் இருக்கக் கூடும் என்று யோசித்துப் பாருங்கள். தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் இந்த இரண்டு மூன்று மசோதாக்களையும் ஆதரிப்பதாக இதுவரை எங்கும் பிரஸ்தாபிக்கவே இல்லை. அன்றியும் தீண்டாமை விலக்கு, கோவில் பிரவேசம் ஆகிய காரியங்களுக்கு சட்டம் செய்யக்கூடாது என்று தஞ்சை திருச்சி ஜில்லாவில் பேசியிருக்கிறார். இப்படிப்பட்ட பார்ப்பனர்கள்தான் காங்கிரஸ் தலைவர்கள் மாத்திரமல்லாமல் தோழர் காந்தியால் பாராட்டப்பட்டவர்களுமாய் இருக்கிறார்கள். இவர்களைப்போன்ற சில பார்ப்பனரல்லாதார்களும் இருக்கிறார்கள். தோழர் முத்துரங்கமுதலியார்கூட்டமும் இப்படிப்பட்டதேயாகும். இவர் இந்திய சட்டசபை போகவேண்டுமாம். இது மாத்திரமா? தோழர் சீர்காழி சிதம்பரநாதமுதலியார் கோவை வெள்ளியங்கிரிக்கவுண்டர் ஆகியவர்கள் சனாதன தர்மத்தை ஆதரித்ததுடன் வைசிராய் பிரபுவைக்கான சனாதன தர்ம பார்ப்பனர்களுடன் டெபுடேஷன் சென்றார்கள் என்று நான் சமீபத்தில் அறிந்தேன். ஆகவே காங்கிரஸ் யோக்கியதையைப்பற்றிநீங்களே அறிந்து கொள்ளுங்கள்.

தேர்தல் தந்திரம்.

இந்த யாகத்தை நான் ஒரு தேர்தல் தந்திரமாகவே நினைக்கின்றேன். சனாதன தர்மம் நிலை நிறுத்தப்பட யாகம் செய்தால் அந்த சனாதன தர்மத்துக்கு விரோதமானவர்களுக்கு பாவமும் கெடுதியும் ஏற்படக் கூடும் என்று பாமர மக்கள் பயப்படக்கூடும். அப்போது பெரும்பாலும் பகுத்தறிவற்ற பாமர ஜனங்களும் தோழர்கள் சிதம்பரநாதமுதலியார், வெள்ளியங்கிரிக்கவுண்டர்முத்துரங்கமுதலியார் போன்ற செல்வவான்கள் என்பவர்களும், சனாதன தர்மத்தை காப்பாற்றுவேன் என்பவர்களுக்கே ஓட்டுக்கொடுக்கக் கூடும் என்கின்ற எண்ணத்தின் மீது பாமர மக்களைப் பயப்படுத்தவே இந்த யாகப் பூச்சாண்டி காட்டப்படுகின்றது யாகத்திற்காக யாரும் பயப்பட வேண்டியதில்லை. நான் வைக்கம் சத்தியாக்கிரகத்தில் இருக்கும்போது எனக்கும் என்மனைவிக்கும் மற்றும் எனது கூட்டுவேலைத் தோழர்களுக்கும் விரோதமாக யாகம் செய்யப்பட்டஇந்த யாகங்களுக்கு மேல்ஜாதிக்காரர்கள் பணக்காரர்கள். மற்றும் அரசாங்கஉத்தியோகஸ்தர்கள் அரசாங்க தேவஸ்தான இலாக்கா ஆகியவர்கள் பலவித உதவி செய்தார்கள். அது எங்களைக் கொல்ல முடியவில்லை. அது மாத்திரமல்லாமல் அந்த சமஸ்தான ராஜாவை சாகாமல் காப்பாற்றவும் முடியவில்லை. அந்த யாகத்தின்போது நான் 6 மாதம் தண்டனை பெற்று திருவனந்தபுரம் செண்டிரல் ஜெயிலில் இருந்தேன். அதே சமயத்தில் அத்தேச அரசர்இறந்து போனார். அதனால்நான் தண்டனை காலம் பூராவும் முடியும் முன்பே விடுதலை செய்யப்பட்டுவிட்டேன் யாகம் முடிந்தும் கூட வைக்கம் சத்தியாக்கிரக விஷயம் வைக்கத்தைப் பொருத்தவரை வெற்றிபெற்றுவிட்டது. ஆகையால் யாகத்துக்கு ஏதோசக்தி இருப்பதாகவோ அது நம்மை ஏதாவது செய்துவிடுமென்றோ யாரும் பயப்பட்டு விடாதீர்கள். இந்த தந்திரம்எல்லாம் உழைப்பாளிகளின் உழைப்பை சோம்பேறிகள் சாப்பிடுவதற்காகவே ஒழிய வேறில்லை

உழைத்தவன் உழைப்பின் பயனை அடைய வேண்டுமானால் இப்படி யாகம், சாஸ்திரம், வேதம், மோக்ஷம், கர்மம், முன்ஜன்மம், கடவுள்செயல் என்கின்ற பித்தலாட்டங்களுக்கு அடிமைப்படக் கூடாது.

எத்தனையோ வருஷகாலமாய் யாகம் செய்யப்பட்டு வருவதாய் அறிகிறோம். உலகத்தில் என்ன அக்கிரமம் மாறி இருக்கிறது? என்ன கொடுமை நீங்கியிருக்கின்றது? யாகம் எக்கியம்கிரமமாய் செய்யப்பட்டு வந்த தெய்வீக அரசர்களான ராமன், அரிச்சந்திரன், ஆகியவர்கள் காலத்தில் உள்ள அக்கிரமம் அயோக்கியத்தனம், கொலைபாதகம் எல்லாம் இன்னும் இருந்துதான் வருகின்றன. எவ்வித மாறுதலும் ஏற்பட்டுவிடவில்லை. ஆகையால் நீங்கள் இப்படிப்பட்ட மிரட்டுதல்களைக் கண்டு பயந்துவிடாதீர்கள்! ஏமாந்து விடாதீர்கள்!!

(தலைவர் பிரசங்கம் அடுத்தவாரம் வெளிவரும்)

நைஜாமின் பெருந்தன்மை

நிலவரி வஜா செய்யப்பட்டது.

சென்ற ராபி பயிருக்கு நிலவரி கால் பாகம் நைஜாம் ராஜ்யத்தில் செய்யப்பட்டது இப்போதைய ராபி பயிருக்கும் அதே மாதிரி மற்றுமொரு கால்பாக வரி வஜா செய்திருப்பதாக மே. பொ. ந. நைஜாம் உத்திரவு பிறப்பித்திருக்கிறார். ஏற்கெனவே 'ஆபி' பயிருக்கு வஜா அளிக்கப்பட்டவர்களுக்கு இந்த வஜா அளிக்கப்பட மாட்டாது. இதே மாதிரி எல்லா ஜாகீர்தார்களும் தங்கள் கீழுள்ள குடிகளுக்கு வரி வஜா செய்யவில்லை. வரிப்பணத்தைத் தண்டுவதற்காக மட்டில் சர்க்காரின் உதவியைக் கோரினர். அவர்களுக்கு உதவியளிக்குமாறு மே. த. நைஜாம் உத்திரவு பிறப்பித்திருக்கிறார். ஆனால் அவர்களும் பொருளாதார நெருக்கடியை உத்தேசித்து சர்க்கார் அளித்ததைப் போலவே வரி வஜா செய்தால் தான் பண வசூலுக்குச் சர்க்கார் உதவியளிப்பார்கள் என்று தெரிவித்திருக்கிறார். அத்தகைய உத்திரவொன்று ஜாகீர்தார்களுக்குப் பிறப்பிக்கப் பட்டது.

(அ. பி.)

ஜரிகைக் கப்பிப்பட்டு அங்க வஸ்திரங்கள்.

மிக அழுத்தமாய் நல்ல மிருதுவான பட்டில் செய்யப்பட்டது. நீடித்து உழைக்கக் கூடியது. சலவைக்குப் போடலாம். உத்திரவாத முள்ளது.

5 முழம் ஜரிகைக்கம்பியுள்ளது
1-க்கு விலை ரூ. 4-0-0

5 முழம் சாதா ப்ளேயன்
1-க்கு விலை ரூ. 3-4-0

N. B இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு மட்டும் பாக்கிங் தபாற் செலவு இனமாய் அனுப்பப்படும்.

The Indo Malaya Fancy Silk Works, Benares City.

சுயமரியாதைச்சங்கம் கோலாலம்பூர்.

பிரிவுபசாரக்கூட்டம்.

மேற்கண்ட கூட்டம் சமதர்ம நாஸ்திகத்தோழர் எஸ். எம். ராமையா அவர்கள் 26-5-34ல் தாயகம் செல்கிறபடியால் 21-5-34ந்தேதியுடன் ஹாலில் மாலை 5-30மணிக்கு ஓர் பிரிவுபசாரக்கூட்டம் செந்தூல் இந்திய சுயமரியாதைச்சங்கத்தின் போஷகர் தோழர் மா. செ. பரிமணம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முகவுரையாகச் சமதர்ம நாஸ்திகத்தோழர் எஸ். எம். ராமய்யா மேற்கண்ட சங்கங்களில் நடத்திய தொண்டினைப்பாராட்டி பேசினார்கள். பிறகு ஷை யாரைப்பாராட்டி தோழர்கள் ஆர். ராமநாதன், எஸ். வி. குப்புசாமி, எம். பி. எம். இராமதாஸ், ஜி. குமாரசாமி, ஆர். கே. தங்கையா ஆகியோர்கள் பேசினார்கள். ஷை தோழர் இவற்றிற்குப் பதிலளித்தார்.

முடிவுரையாக தலைவரைப் பாராட்டிப் பேசியபின் ஷை தோழரால் பிரஸ்தாபத் தோழர் தலைவருக்கும், பிரசங்கியார்களுக்கும், விஜயம் செய்தோர்க்கும் வந்தனம் கூறக்கூட்டம் இனிது முடிந்தது.

திருவாரூர்.

ப்ரிதிங்கர்ஸ் அசோசியேஷன்:—31-5-34ந்தேதி இரவு 7-30 மணிக்குச் சங்கத்தின் மாதாந்திரக்கூட்டம் ஒன்று தோழர் எஸ். ராமமூர்த்தி அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அதுகாலை தலைவர் முகவுரையாக நமது வேலை என்பதைப் பற்றிப் பேசியபின்தோழர் கே. ஆர். முத்துக் குமரன் அவர்கள் "வாலிபர்கள் கடமை" என்பதைப்பற்றியும், எம். நடேசன் அவர்கள் மக்களின் முன்னேற்றம் என்பதைப்பற்றியும் டி. பி. பக்கிரிசாமி அவர்கள் சுயமரியாதை இயக்கம் என்பதைப்பற்றி பேசிய பின் தலைவர் முடிவுரையாக மேலே கண்ட விஷயங்களை ஆதரித்துப் பேசினர். கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறின. தீர்மானமாவது:- திருச்சியின் நகர சபையில் மீண்டும் தோழர் ரெத்தினவேல் அவர்களை தலைவராக தேர்ந்தெடுத்த அங்கத்தினர்களை இச்சங்கம் பாராட்டுகிறது.

இவ்வூரில் வரிகொடுப்போர் சங்கம் ஒன்று ஆரம்பித்த தோழர்களை பாராட்டுவதோடு ஷை சங்க சட்டதிட்டங்கள் படி நடக்கும்படி இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது. இரவு 9-30மணிக்கு கூட்டம் இனிது முடிந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

—o—

வட ஆற்காடு ஜில்லா உபத்தேர்தல்.

சமீபத்தில் காலஞ்சென்ற தோழர் எம். ஏ. வேலாயுத முதலியார் ஸ்தானம் ஜில்லா போர்டில் காலியாக விருப்பதால் சமீபத்தில் தேர்தல் நடைபெறப் போகின்றது. ஷை ஸ்தானத்திற்கு தோழர் வேலாயுதமுதலியார்குமாரர் தோழர் எம். வி. துரைசாமி முதலியார் நிற்பதாய் இருந்தால் எனது நண்பர்கள் அவரை ஆதரிக்கக்கேட்டுக்கொள்ளுகிறேன். ஷையார் நிற்கத்தவறினல் எனது நண்பர்கள் வேண்டுகோளுக்கிணங்கி நான் நிற்க இசைந்துள்ளேன்.

வி. பார்த்தசாரதி,
ஜோலார்பேட்டை.

வேலூர் ஜில்லா போர்டு விடுமுறை.

2-6-34ல் வேலூர் ஜில்லா போர்டு கட்டிடத்தில் மதாந்திரக்கூட்டம் கூடியது. போர்டு மெம்பரும், பிரபல வியாபாரியுமான தோழர் எம். ஏ. வேலாயுத முதலியார் காலஞ்சென்று விட்டதற்கு, அநுதாபம் காட்டுவதின் அறிகுறியாக இக்கூட்டத்தைக்கலைத்துவிட வேண்டுமென்று தோழர் நத்தானியல் பிரரேபணை செய்தார். தோழர் ஆரணி சுதானந்தம் அவர்கள்ஷைதீர்மானத்தைஆமோதித்தார், ஏகமனதாக தீர்மானம் நிறைவேறியது. இதனோடு ஜில்லா போர்டு ஆபீசையும் அரைநாள் மூடப்பட்டது. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

"ஷண்முகம் ஹால்"

இலங்கையில் 27-5-34ல் நடந்த கூட்டத்தின் தலைவர் தோழர் எஸ். ஷண்முகம் அவர்கள் இலங்கை பூலா ஹந்து வாலிபர் சங்கத்திற்கு புதிய கட்டிடம் நிறுவுஞ்செலவை ஒப்புக்கொண்டதைப் பின்பற்றி மற்றவர்களும் நடக்க வேண்டுமென்று வற்புறுத்தியதுடன் புதிய கட்டிடத்திற்கு "ஷண்முகம் ஹால்" என்று நாமம் சூட்டப்படுமென்று அறிவித்தனர்.

வட ஆற்காடு ஜில்லா, திருப்பத்தூர் பாலிய ஜீவகாருண்யச் சங்கம்.

கும்பகோணத்து யாகக் கண்டன கூட்டம்.

4-6-34 ந்தேதி திங்கட்கிழமை இரவு 8-30 மணிக்கு சங்கக் கட்டிடத்தில் மேற்படி யாகக் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. அதுகாலை தோழர் வி. நாராயணன் அவர்களை தலைமை வகிக்குமாறு சங்கக் காரியதரிசி தோழர் எம். சிங்காரம் கேட்டுக்கொண்டதின் பேரில் தோழர் தலைமை வகித்தார்.

தோழர் எ. என். நரசிம்மன் அவர்கள் பார்ப்பன ஜகத்குரு வாகிய சங்கராச்சாரியார் மடத்தில் நடந்த ஆட்டுப் பீஜத்தை நசுக்கிக் கொல்லும் அஜயாகத்தை ஆர்வத்துடன் கண்டித்து பேசினர்.

தோழர் சிங்காரம் அவர்கள் யாகக் கண்டனத்தை ஆதரித்துப்பேசிய பின் தென்னிந்திய ஜீவாக்ஷக பிரசார சபையார் யாகக் கண்டனத்திற்காக எடுத்துக்கொண்ட முயற்சிக்கு இச்சபை நன்றி பாராட்டுவதாகப் பேசினர்.

யாகத்தை இக்கூட்டம் பலமாக கண்டிப்பதுடன் சர்க்கார் இனியாவது தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென சங்கத்தின் சார்பாக தலைவர் முடிவுரையில் கூறினர். இக்கூட்டம் வந்தனோபசாரத்துடன் 10-40க்குஇனிது கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கௌன்ஸிலர் வீட்டில் திருட்டு.

ஈரோடு முனிஸிபல் கௌன்ஸிலர் தோழர் ஈ. எஸ். கோவிந்தசாமி நாயுடு அவர்கள் வீட்டில் சென்றமாதம்வீட்டினுள்திருடர்கள்புகுந்து அலமாரிபீரோவைத்திறந்து,அதனுள் இருந்த சிறு கைபெட்டியை உடைத்து அதனுள் இருந்த சுமார் 500 600 ரூபாய் பெருமான முள்ள நகைகளும், பொருளும் திருட்டுப் போய் விட்டது. மறுதினம் தோழர் கௌன்ஸிலர் கோவிந்தசாமி நாயுடு அவர்கள் ஊரில் இருந்து வந்ததும், போலீஸாருக்கு முழு விபரம் கூறினர்கள்.

தோழர் கோவிந்தசாமி நாயுடு குடியிருக்கும் வளையல்காரத்தெருவான து ப்ரதமான ஜனநடமாட்டமுள்ள தெருக்களில் ஒன்றாக இருந்தும் இங்கு அடிக்கடி இத்தகைய திருட்டு நடைபெறுவது பெருத்த ஆச்சர்யம். போலீஸார் புலன் விசாரிக்கிறார்கள் இதுவரை துப்பு எதுவும் புலப்பட்டதாகத் தெரியவில்லை.

வைத்திய அறிக்கை.

வாய்வு, வயிற்றுவலி, கிராணி, இடுப்புவலி முதலிய வியாதிகளுக்கு

பஞ்சகல்ப சூரணம்.

இம்மருந்தை சாப்பிட்டு ஆயிரக்கணக்கான நோயாளிகள் குணமடைந்து விட்டார்கள். ஒரு முறை சாப்பிட்டுப்பாருங்கள்.

இடுப்புவலி, வயற்றுவலி, வயிற்றுப்போக்கு, வயற்றுப்பிசம், வயற்றிரைச்சல், அண்டவீக்கம், பாண்டு, காமாலை, சோகை, வாய்கசப்பு, பசியில்லாதிருத்தல், புளியேப்பம், நெஞ்சுகரிப்பு, நெஞ்செரிவு, அஜீரணம், கிராணி, குன்ம வலி, குன்மக்கட்டி, குன்ம வாந்தி, இருமல், மூலவாய்வு, மஞ்சள்நீர் மூத்திரம், பெண்களுக்குண்டாகியருதுசம்பந்தமான சகல வாய்வுகளும், குணமாகின்றது.

இடுக்காம் சோற்றில் நெய்யுடனே இதமாய் மூன்று பிடியுண்ணே
உண்டிடுவாய் பிரசன்னம். உதிரம் பொருமல் பெருவாய்வு
குண்டுபோல் திரண்டிடுதல் கூப்பிட்டோடல் கீழ் விளுதல்
மண்டிவலித்தல் களித்திடுதல் மயக்கம் சத்திபலவாய்வும்
தெண்டம் தெண்டம் நமக்கெனப்போம். தேவி அமிர்தம் இதுதானே

என்ற படி இம்மருந்தை 3 நாள் சாதத்துடன் சாப்பிட்டால் எல்லா வாய்வுக்களும் இருந்த இடம் தெரியாமல் பறக்கின்றது. மருந்து சாப்பிடும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

3நாள் 6வேளை மருந்தடங்கிய டின்1 விலை ரூபா 2—0—0

அரண்மனை வைத்தியர் எஸ். டி. மாணிக்கம் பிள்ளை,

சித்தவைத்தியசாலை, வளையல்காரத்தெரு, ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள

இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

சிதம்பர ரகசியம்	0-8-0	ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்	0-6-0
சுதந்தரப்போர்	0-4-0	உழைப்பாளிகளுக்குஏன் இவ்வுலகமில்லை?	0-1-0
மாதர் சுதந்திரம்	0-8-0	சாமிகளின் அடிமை	0-12-0
விவாக விடுதலை	0-4-0	லோகல்போர்டுஆக்ட் (சென்னை)	2-0-0
மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும்	2-0-0	பகுத்தறிவு கீதம்	0-1-0
		காந்தி-கிட்டு	0-1-0
The Right of Temple Entry	Re 1—0—0	The Curx of the Indian Problem	Re. 1—0—0

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டட், ஈரோடு.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

பிரகிருதிவாதம்:— இந்நூலில் கடவுள், மதம், ஆத்மா, மோட்ச, நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் அவசியத்தையும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை 0—3—0.

பெண் ஏன் அடிமையானாள் விலை 0—5—0

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்:— இந்நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது. விலை 0—3—0

பிரபஞ்ச உற்பத்தி:— இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை 0—3—0.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவும் ஆராய்ச்சியும் கொண்டதான அறிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

விலை அணு 8.

லெனினும் மதமும்.

இது பொதுவுடைமைக் கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட பத்ரகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும், விலை அணு 4.

பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை வற்புறுத்தும் மிகச் சிறந்த நூல்.

விலை அணு 3.

கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட நாஸ்திகம் நிறைப்பிய நூல். விலை அணு 4.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யத்தால் எழுதப்பட்டது.

விலை அணு 8.

இராமாயண ஆராய்ச்சி.

இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் இதில் கண்ணாடி போல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. பாலகாண்டம் அணு 4.

அயோத்தியாகாண்டம் அணு 8.

ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் மிகக் கொடிய ஆபாசங்கள் விளக்கிக் காட்டும் பெரிய புத்தகம். விலை அணு 4.

தர்ம பரீக்ஷை.

இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்ட புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். விலை அணு 3.

மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ள இந்திய நாட்டின் நிலைமையை விளக்கும் நூல்.

விலை அணு 3.

பங்கஜம்.

பார்ப்பனப் புரட்டை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணு 4.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு கழக வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத் தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணு 5.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுகட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 5.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பேர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணு 3.

மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L, அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 2.

கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது 100 பக்கங்கள் கொண்டது. விலை அணு 5.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

விலை அணு 3.

நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத வனுயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணு 3.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணு ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

Edited, Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.